Q23:38.2119 3TN
N11
83236

உ

சிவமயம்.

# திருநெல்லிக்காத் தலபுராணம்.

இஃது

தேவக்கோட்டை ஸ்ரீமான்:

மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்கள்

வேண்டுகோளின்படி

திருவாரூர்:

சுந்தரேசபாரதியார் அவர்களால்

இயற்றப்பட்டு

ஷை கோவில் டிரஸ்டி

அளகாபுரி சுப்பிரமணியன் செட்டியாரவர்கள்

பொருளுதவியினால் அச்சிடப்பட்டது.

மதுரை:

கல்யாணசுந்தரம் பவர் பிரஸ்.

1911.

153

153 / 4-1911

83236

Q23:3P.2 1193TN
N11

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட
செப்டம்பர் மாதம் 1986 வருடம்

செப்பனிட்டு முடித்த
செப்டம்பர் மாதம் 1986 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1911
153
MADRAS.

153
4-1911

உ

சிவமயம்.

## காப்பு.

நேயமார்ந்தநன் மனத்திரு ணீங்கிடநிறையுந்
தூயஞானக மேயெனச் சுருதியேத் தெடுப்ப
தாயனைவங்கர வாரண மாமல கக்கா
மேய மாண்மியம் விளம்பவெம்முன னந்தடக்கிரவும.

## ஆமலகவனநாதர்.

ஆமலமென் றுதுரா வென்றுநேர்ந் திடுமோவக
னாளின் முன்னர்ப்
போமலமா ம்படிமுத்திபுணர்த்தியருள் செனத்திருமுன
புகன்றன்பாரத்
தூமலர்தூய்ப் பணிபவர்க்குக்கரநெல்லிக் கனியினருள்
வாய்மை தோன்ற
ஆமல கவனத் திவளர்மலக வனநாத
னடிகள் போற்றி. (1)

## மங்களநாயகி

எங்களுறு யடியேனைக் கடைக்கணித்தாள் கென்றன்பி
னிறைஞ்ச வோரைத்
திங்களுகத்திலுட னணியுமையர் திருவடிக்கட்
சேர்த்து நீள்பு
தீங்களுகன்னகடை கொண்டவம்மை யாமலக
கானமேய
மங்களநாயகிதுணைத்தாண் மரைமலரும் பெருமைத்தெம
மனத்தடாகம். (2)

491
294535



## விநாயகர்.

தன்னை முனம் வழிபடுத லின்றியே தொடங்கு
    செயறகுமாறு
முன்னு தலினுடம்பாட்டுப் பெருமூ முன்னர்வழிபட்ட
    முற்றுமாறு.
மன்னு தலின் மறைப் பொருளுந்தருவிக்கி னேசா
    மம் புணர்ந்து
பன்னுமா லமுமமுதம் பண்ணவருக்களித்த
    பிரான்பாதம் போற்றி. (3)

## முருகக்கடவுள்.

இடிக்கொடி கைப்பிடியானை யின்றமடப்பிடியை மண
    தெயினர் சேரி
யடிக்கடி போய்த்தினைப்பிடியை யருகிலயுந்திடு நறவம
    பருகியன்னோர்
மடக்கொடி யைக்கொடிப்படு சிறிடையாளைச் செங்காந்தண்
    மலர் நேருங்கை
பிடித்தருளி யடித்தவேல் பிடித்தபிரான் பாதங்கை
    பிடித் துய்வாமே (4)

## திருநந்திதேவர்.

### வேறு.

கருநந்திக் களிப்படையு மானுடவா கதியடைய
வருநந்தி பக்கமற மாசிலாப் பசுபாசக்
திருநந்தி பற்பதியின் செயதெரிந்த முதற்குரவன
திருநந்தி தேவனிணைச் செய்யமலர்ப்பதம் போற்றி (5)



## திருஞானசம்பந்த சுவாமிகள்

### வேறு.

முதற்குழவியாய துதிக் கைக்குழவிசூர்மாவை
    முருக்கும் வேற்கைக்
கதக்குழவியேனைய நற்குழவியெலாமலிதரும் பால்
    கதுவ லூட்டா
விதத்துவரையம் மைக்குகதாயினிய குழவியொனல்
    விளங்க வன்று
விதத்தமுலைப் பாலளிக்கப் பருகுமாறைக் குழவிசா
    மொத்தி வாழ்வாம். (6)

## திருநாவுக்கரசு சுவாமிகள்.

பொன்னிறை செந்தமிழறிலர் பொன்னிறைமுன்னினுமோர
    பொலிதல் போல
புன்னெறி யார்சேற்றுறையிற் புக்கவோ ரெரிகொளுவிப்
    போந்த பின்னர்
முன்னையினுங் கோடிமடங்கொளிர் சைவவொளி வளர்ந்து
    முதிரவாய்ந்து
மன்னியமர்த் தருளியசீர் வாகீசப் பெருந்தகைதாள் வாழ்த்தி
    வாழ்வாம் (7)

## சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

கலைவை திருநீறாகக் கவினிய பொற்பணியக்க
    மணியாக்கோடல்
நிலவுமடியார் செயலென் றுண்மை நாலுரைப்பதற்கு
    நேரேயாகக்
கலைவை திருநீறாகக் கவினிய பொற்பணியக்க
    மணியாக்கொண்டிவ்
வுலகுய்யத் திருத்தொண்டத் தொகைவகுத்தார் பாதமல
    ருன்னிவாழ்வாம். (8)

## மாணிக்கவாசக சுவாமிகள்.

உடையவர் பாலையும் புலித்தோலுடையவரேயரிபிரம
ரும்பரேனை
நடைபெறு வகிடப்பவெலாமுடைமையே யென்னுமுரை
காட்டுவாராய்க்
கொடைமிகுகூடற்செழியன் குதிரை கொளக்கொடுத்தபொருள்
கொடுபோய்வானை
மடையுகளும் பெருந்துறையிற் றிருப்பணிசெய்யாசரன்
வழுத்திவாழ்வாம் (௯)

## அறுபத்துமூவர்.

### வேறு.

அல்லை யணிகண்டத் தாடகப் பொன்னம்பலத்தே
யில்லை யினைதரிசித்தார்க்கென்று மறைச்சிலம்பொலிக்கத்
தொல்லை நடம்புரிதில்லைத் தூய மறையோர் முதலா
வெல்லையிலாத்திருத் தொண்டத் தொகையடியா ரெலாமுடை
[யார்.

பாயிரம் முற்றிற்று.

உ

சிவமயம்.

## நூல்

பூவுலகத்தின்கட் பெருஞ்சிறப்பு வாய்ந்து, சைவாலயங்களைத் தாலும், ஆன்மகோடிகளுய்யும் பொருட்டுச் சிவபெருமான் எழுந்தருளியிருக்கின்ற, திருவருட்பாக்கள் பெற்ற, மூர்த்தி, தலம், தீர்த்தம் முதலிய விசேடங்களாலும் பெருமைபெற்ற சோழநாட்டில், 'அமரர் நாடாளாமேயாரூராண்ட,' என்னுஞ் சுருதிக்கிசைய ஸ்ரீதியாகேசப்பெருமான் எழுந்தருளப்பெற்ற அழகிய செல்வத்திருவாரூரிற் பூங்கோயிலின் வடக்கிற் சித்திரபீடமென்னுந் திவ்விய ஸ்தானத்தில், மகாவிட்டுணுவின் அவதாரமாகிய ஹயக்கிரீவ முனிவர் ஸ்ரீதியாகேசப்பெருமான் திருவாரூ ராலநாகர கண்டமெனப்பெயர்பெற்று, திருவாரூர், அதனையடுத்த திருத்தலங்கள் இவற்றின் மான்மியங்களைத் தேவர், முனிவர் முதலாயினோர்க்கு விரித்தோதுவாராயினர். அப்பொழுது அந்த திவ்வியஸ்தானத்தில் சிவத்தியான பரராயிருந்தருளிய அகத்தியமா முனிவர் ஹயக்கிரீவரை நோக்கி முனிசிரேட்டரே நீருரைத்த சிவஸ்தலமான்மியங்களால் மனமிக மகிழ்ந்தனம். இத்திருவாரூரையடுத்த சிவஸ்தலமான்மியங்களுண்டேல் மேலான தொன்றையெடுத்தோது வீராக,' வென்றோதினர்.

அது கேட்ட ஹயக்கிரீவமுனிவர் சிறிதுநேரம் தியானித்திருந்து, ஆனந்த பாஷ்பம் பெருக மெய்யெலாம் புளகம் போர்ப்ப நாத்தழு தழுப்ப ஆனந்த பரவசராய்க் கூறுவாராயினர்.

முனிபுங்கவராகிய அகத்திய மாமுனிவரே உமது பெருமை எம்மனோரா லளவிடற்பாலதோ. பார்வதி தேவியாரைச் சிவ பெருமான் திருமணம் புரிந்தகாலத்திற் றேவர் மானுடர் யாவரும் ஒருங்கு கூடினதாற் பூமி வடபாற்சாய்ந்து தென்பா லுயர்ந்தது

நோக்கி எம்பெருமான் அகத்தியனே, நீயே நம்மை ஒப்பாயதலாற் றென்றிசைக் கேகுக என்று திருவாய் மலர்ந்தருளப் பெற்றீர். வில்வலன் வாதாபியாகிய கொடிய அசுரரைக்கொன்று, கிரௌஞ்சத்தின் செருவத்தை நீக்கினீர். வானுறவோங்கி விண்ணவருக்கிடர் செய்த விந்தமலையைக் கீழுற வாழ்த்தினீர். பின்னேரொன்று இந்திரன் வேண்டச் சமுத்திரத்தை ஆசமனஞ் செய்தீர். சொற்சுவை பொருட்சுவை மிக்க வாய்ந்த இனியதமிழ்மொழியை விரித்தருளினீர்; இன்னோரன்ன பற்பல எண்ணரிய பரோபகாரங்களை செய்து வருகின்ற தாங்கள் எத்தனையோ சிவஸ்தலமான்மியங்களை முனிவர்க்குபதேசித்திருக்கின்றீர்கள். அவை அகஸ்திய சங்கிதை யென்று விளங்குகின்றன. இத்தகுசிறப்புவாய்ந்த தங்கள் முன் நானோ சிவஸ்தல மான்மியங் கூறவல்லேன். ஆயினும் தங்கள் ஆணையை மறுத்தற்கஞ்சித் தங்கள் மூலமாய் ஏனையோருணர்தலையும் பொருட்டுத் திருவருளை முன்னிட்டொருவாறு சொல்லத்துணிந்தேன்.

முனிசிரேஷ்டரே, விராட் புருஷனுக்கு மூலாதாரஸ்தானமாகிய திருவாரூருக்குத் தென்பக்கத்தில் திருநெல்லிக்காவென்று ஒரு சிவஸ்தல மிருக்கின்றது. அத்தலத்தின் பெருமையும் அங்கெழுந்தருளியிருக்கிற மூர்த்தியின் பெருமையும் தீர்த்தங்களின் பெருமையும் அவ்விடத்துச் சிவபெருமான் செய்தருளிய திருவிளையாடல்களும் நினைக்குந்தோறும் என்னுள்ள முருக்க மயிர் பொடிக்கா நின்றது. பேரானந்தம் பெருகாநின்றது. அத்திருத்தலத்தின் மான்மியத்தை உள்ளவாறு புகலுந்திறனிலேனாயினும் ஒருவாறு கூறுவேனென்றுரைத்த அயக்கிரீவரை அகத்தியமுனிவர் பார்த்து அதன் மூர்த்தி, தலம், தீர்த்தம் இவ் விசேடங்கள் யாவை? எம்பெருமான் செய்தருளிய திருவிளையாடல்கள் யாவை? இவற்றையெல்லாம் முறையே சொல்லியருளுவீராக என்று கேட்க அயக்கிரீவர் சொல்வாராயினர்.

---



## தலவிசேடப்படலம்.

முனிபுங்கவரே! இந்த உத்தம சிவஸ்தலம் கீழ்த்திசையில் திருக்காறாயில், மேற்றிசையில் திருத்தெங்கூர், வடதிசையில் திருவாட்டியத்தான்குடி, தென்றிசையில் விஸ்வவனம் ஆகிய நான்கு ஸ்தலங்களைக் கொண்டு நடுநாயகமாக விளங்குகின்றது. இதற்கு வடமொழியில் ஆமலகவனம் என்று பெயர். இப்பெயர்க்கு ஆணவம்முதலிய மலங்களை நாசப்படுத்துவதென்று பொருள். ஆதலால் தன்னிடத்து எப்போதும் பக்தி புரிவோருக்கும் மும்மலத்தையும் நாசப்படுத்துமென்பதற்கையமில்லை. சர்வலோக சரண்யராகிய சிவபெருமான் பார்வதியாரோடும் ஆன்மகோடிகளுய்யும் பொருட்டுக் கோயில்கொண்டு வீற்றிருக்கின்ற திருத்தலங்கள் வாரணாசி முதற்பலவுள. அவற்றுள் அறுபத்தொன்று மேம்பட்டன. அவற்றுள்ளும் பதினைந்து மேம்பட்டன. அவற்றுள்ளும் திருநெல்லிக்கா அதிகமேன்மையானது. இதன் விசேடங்களை என்னாலியன்றமட்டில் எடுத்துரைக்கின்றேன்.

இத்திருத்தலத்திற்குத் திருநெல்லிக்கா, அருணநகரம், சத்தியாமலகபுரம், பிரம தீர்த்தபுரம், குட்டரோக ஹரபுரம், மங்களாபுரம், சர்வோத்தம புரம், ஆனந்தபுரம், அமிர்தானந்த பஞ்சாக்ஷரமூர்த்திபுரம், பஞ்சகூடபுரம், அமிர்த வித்தியாபுரம் முதலிய அநேகத்திருநாமங்களுண்டு.

இத்தலத்தில் சிவமூலமந்திரமாகிய பஞ்சாக்ஷரங்கள் திவ்ய ரூபங்கொண்டிருந்து தமது வாச்சியப்பொருளாயுள்ள ஸ்ரீமங்களநாயகி ஸமேதராகிய ஸ்ரீ ஆமலகேசனை விதிப்படி பூசித்துத் தவஞ்செய்து கொண்டு இடையறாது வசிக்கின்றன. அவை வசிக்குமிடம் இப்பொழுதும் இதற்குக் கூவிளித்த தூரத்திற் கீழ்த்திசையில் நமசிவாய புரமென்னும் பெயரால் விளங்குகின்றது.

திருவாரூர், சிதம்பரம், திருவண்ணாமலை, காசி முதலி தலங்களிற் பிறத்தல் தெரிசித்தல், நினைத்தல் இறத்தல் முதலி வற்றால் முக்திகிடைக்கும். இத்திருநெல்லிக் காவிலோ பி தன் முதலிய எந்தச் செயலாலும் முக்திகிடைக்கும். ஆத இத்தலமெல்லாம் ஒன்று கூடின் எத்துணை விசேடமோ அ துணை விசேடமுடைத்து இத்தலத்திற் குடியிருத்தலே போ யாது வேறொன்றுஞ் செய்யாமல் வசித்தல் மாத்திரஞ் செய்யினும் அவன் மேற்பதத்துக்குரியவனாகிறான். பிரமகத்தி முதலிய கொ ம்பாவமாகிய பஞ்சிற்கு இத்திருத்தலம் அக்கினியேயாகும். தெ தோ தெரியாமலோ இத்தலத்துட் புகுவானாகில் எழுபிறப்பில் தீவினை முழுதும் அப்பொழுதே நீங்கப்பெறுவான். எறு முதல்யானையிறுதியான பகுத்தறிவில்லாதவுயிர்களும், மரஞ்செ முதலியவோரறிவுயிர்களும் இங்ஙனம் நற்கதியடைகின்றன.

இத்தலத்தை விட்டு வேறுதலம் தேடிச்செல்பவர் கை லுள்ள அமுதத்தைவிட்டுப்புறங்கையை நக்குபவர் போல முப்பத்து முக்கோடி தேவர் முனிவர் முதலிய யாவரும் தலத்தில் அனவரதம் நெல்லிவன நாத தெரிசனஞ்செ கொண்டு வசிக்கின்றார்கள். இதில் வசிக்கின்ற எந்தப் பிர களுக்கும் பின்னர்ப் பிறப்பில்லை இஃதுண்மை, உண்மை!

அச்வமேதமுதலிய யாகங்களாலும், தன்னிடத்திலுள்ள பொருள் முழுதையும் சிவதர்மத்துக் களித்தலாலும், எள், பொ வஸ்திரம், கன்னிகை, பசு, நிலம், அன்னம் முதலிய தானங்களாலும், அடையக்கூடிய பயனை இத்தலத்தில் வசிப்பவனடைகின்றான். மற்றவிடங்களிற் சாந்திராயண முதலிய விரதங்களாலடைகின்ற பயனை இவ்விடத்தோரிரவு உணவின்றியிருந்தவன் அடைகின்றான். ஏனைத்தலங்களில் கருப்ப வாசம் சு வாசம் முதலியவற்றாலடையும் பயனை இங்ஙனொருதினம் வசிப்பவனடைகின்றான். வேறிடத்தில் மாசோபவாசம், ச மாசிய முதலிய வற்றால் அடையும் பயனை இத்தலத் தினோபவாசஞ் செய்தவன அடைகின்றான.



இத்தலத்து விருந்துண்டல் ஏனைத்தலத்து வாயு பக்ஷணத்தை யொக்கும். இங்கன் ஒரு பிடியரிசி யளிப்பவன் மற்றையிடத்தில் மகாதான பலனையடைவான்.

---

## 3. தீர்த்த விசேடப் படலம்.

---

இத்தலத்தில் ஐந்து புண்ணிய தீர்த்தங்களுள்ளன. அவை முறையே, சூரிய தீர்த்தம், பிரம தீர்த்தம், சக்கர தீர்த்தம், விபாதநிவாரண தீர்த்தம், சந்திர தீர்த்தமெனப் பெயர்பெறும். இப்பெயர்கள் இத்தீர்த்தங்களுக்கு வந்த காரணம் பின் சொல்லப்படும். முன்னொருகாலத்தில் மழையின்மையால் உலகத்திலுள்ள ஆன்ம கோடிகளெல்லாம் மிக்க துன்பமடைந்தன, பிரம விஷ்ணு முதலிய தேவர் முனிவர் யாவரும் ஒன்றுகூடித் திருநெல்லிக் காவையடைந்து உலகுய்யும்படி எக்காலத்துங் கெடாத தீர்த்தங்களை வேண்டிச் சந்நிதியில் முறையிட்டார்கள். அதற்கிரங்கி நெல்லிவன நாதர் சிவலிங்கத்தினின்றும் வெளிவந்து தமது சூலத்தினால் இத்தலத்தில் ஐந்து புண்ணிய தீர்த்தங்களை யுண்டுபண்ணித் தமது சடையிலுள்ள கங்கையின்றிவலையை விடுத்தருளினார். அத்திவலையானது பெரு வெள்ளமாகி இவ்வைந்து தீர்த்தத்திலும் நிரம்பியது. இத்தீர்த்தங்களின் பெருமையையுள்ளபடி யெடுத்துரைத்தல் எம்போலியர்களுக் கெளிதன்று.

எல்லாவுலகத்திலும் உள்ள எல்லாப் புண்ணிய தீர்த்தங்களிலும் ஸ்நானம் பண்ணிய பயனை இவ்வைந்து தீர்த்த ஸ்நானம் கொடுக்கும். அக்கினியைத் தெரியாமல் தொட்டாலும் அது எப்படித் தகித்து விடுமோ அதுபோல் இவ்வைந்து தீர்த்தத்தின் பெருமையை அறியாதவனாய் ஸ்நானம் பண்ணினாலும் எல்லாப் பாவங்களையும் போக்கும். சிரத்தையோடு ஸ்நானஞ்செய்தவன் சிவயோகியாகிக் கிருதகிருத்தியனாவான். அதிக சிரத்தையின்றி ஸ்நானஞ் செய்தவன் நிச்சயமாய்ச் சுவர்க்கத்தை யடை

கின்றான். இத்தீர்த்தங்களில் முழுகி, சிறியபொருள் தானம் செய்தாலும் அவன் மகாதான பலனையடைவான். இவற்றின் மூழ்கிக் கரையிலிருந்து செய்யுந்தவம் விரத மகாதான முதலியன ஏனைப் புண்ணிய தீர்த்தங்களிற்செய்வதினும் கோடிமடங்கு அதிக பயனைத்தரும். ஜன்ம நக்ஷத்திரத்தில் ஐந்து தீர்த்த ஸ்நானம் பண்ணுவதால் ஜன்ம ஜன்மாந்திரத்திற் செய்த பாபம் போகும். சித்திரை, கார்த்திகை, மாசிமாதங்களில் ஐந்து தீர்த்த ஸ்நானம் விசேஷம். அமாவாசை ஸ்நானம் நூறு மடங்கும், சங்கராந்தி ஸ்நானம் ஆயிரமடங்கும், விஷு புண்ணியகால ஸ்நானம் பதினாயிரமடங்கும், இரண்ட யனங்களிலும் இருபதினாயிரம் மடங்கும் விசேஷம். ஐந்து தீர்த்த ஸ்நானம் ஐந்து பாதகங்களையும் தீர்க்கும் பானுவாரத்தில் இத்தீர்த்தங்களில் மூழ்குவது மிக விசேஷம். அமாவாசைகூடிய பானுவார ஸ்நானம் மிக விசேஷம்.

சிரத்தையோடு விதிப்படி செய்யும் ஐந்து தீர்த்த ஸ்நானத்தால் பிரமகத்தியும் விடுபடுகின்றது. மற்றப்பாபங்கள் எளிதிற் றீருமென்பதிற் சந்தேகம் யாது? இத்தீர்த்தங்களில் மூழ்கிக் கரையில் தென்புலத்தாரைக் குறித்துப் பிண்டமிட்டாலும், திலதர்ப்பணஞ் செய்தாலும், அவர்கள் அதிக திருப்தியடைந்து எல்லாப் பாவங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். இத்தீர்த்தங்களில் எவ்வளவு எள்ளு தருப்பணஞ் செய்யப்படுகின்றனவோ, அவ்வளவு ஆயிரவருஷம் பிதிர்தேவர்கள் சுவர்க்கவாசம் பண்ணுகிறார்கள். திரிலோகத்துமுள்ள சமஸ்தமான புண்ணிய தீர்த்தங்களும் இவ்வைந்து தீர்த்தங்களையும் எக்காலத்துஞ் சேவித்துக் கொண்டிருக்கின்றன. ஒருவன் சிவலிங்கார்ச்சனையால் மற்றத்தேவர்களை யெல்லாம் பூசிக்கிற பயனை எப்படி அடைகிறானோ அப்படியே இத்தீர்த்த ஸ்நானத்தால் ஏனைத் தீர்த்த ஸ்நானப்பலன் முழுதும் பெறுகிறான். அக்கினிஹோத்திர வேதவிரத தானதவங்களும் ஐந்துதீர்த்த ஸ்நானபலனிற் கோடியிலொரு கூற்றிற்கும் நிகராகா. ஜன்மாந்தரங்களிற் செய்த பெரும்புண்ணிய பயனாலன்றி இந்த ஐந்துதீர்த்த ஸ்நா



கிடைக்கமாட்டாது. பிரயாகையில் தினந்தினஞ்செய்யும் நித்திய ஸ்நானபலனை ஐந்து தீர்த்தத்தில் ஒருதின ஸ்நானம் கொடுக்கிறது. ஓர் மலடி ஐந்துதீர்த்த ஸ்நானம் ஒருவருடம் செய்வாளாயின், நற்குணமும், பெருங்கல்வியும் வாய்ந்த ஆண்மகவைப் பெறுவாள். இவ்வைந்து தீர்த்தங்களையும் தரிசித்ததினால் அறமும், பரிசித்ததினால் அறம் பொருளிரண்டும், ஆசமித்தலினால் அறம் பொருளின்பம் மூன்றும், ஸ்நானத்தினால் அறம் பொருளின்பம் வீடு நான்கும் கிடைக்கும். இத்துணைச்சிறப்பு வாய்ந்த தீர்த்தம் மூவுலகினும் இல்லை! இல்லை!

## 4. மூர்த்தி விசேடப்படலம்

திருநெல்லிக்காவாகிய சக்கியாமலக க்ஷேத்திரத்தில் அனவரத ஸாந்நித்தியராய் வீற்றிருந்தருள்கின்ற நெல்லிவனநாதராகிய சிவலிங்க மூர்த்தியின் மகிமை எவராலுஞ் சொல்லுதற்கரிதே. இம்மூர்த்திக்கு, ஆமலகமகாலிங்கம், அமிருதலிங்கம், மங்களலிங்கம், ஆதிலிங்கம், மூலலிங்கம், வியட்டிலிங்கம், சமட்டிலிங்கம், சமட்டிவியட்டிலிங்கம், சமஸ்தலிங்கம், மூலசோமகரன், சோமபிரகாசி, ஆமலகேசன், ஆநந்தமோகன், அமிர்தாமனோரஜகரன், திவ்யாமலககாநவாஸன், சதுர்வேத புரீசன், ஆமலகேந்திர சோமானுக்கிரகன், முதலிய அநேகத்திருப்பெயருண்டு. இச்சிவலிங்கப் பெருமானை நினைத்தல், வழுத்தல், வணங்குதல், பூசித்தல் முதலிய வழிபாடு செய்யின், இப்பிரமாண்டத்திலுள்ள எல்லாச்சிவலிங்கங்களையும் அவ்வாறு வழிபட்ட பயன்கிடைக்கும். வேரில்விடுகிற நீரினால் ஒருமரத்தின் கிளையெல்லாந் தளிர்ப்பதுபோல இம்மகாலிங்கத்திற்குச் செய்கிற அபிஷேகார்ச்சனாதிகளால் எல்லாத்தலங்களிலுமுள்ள எல்லாச் சிவலிங்கங்களுக்குந்திருப்தியாம். எந்தச்சிவலிங்கப் பெருமான் திருநெல்லிக்காவில் பதின்மூன்று திருவிளையாடல் நடத்தினாரோ, கற்பகவிருக்ஷமைந்தையும் ஐந்து நெல்லிமரமாக்கினாரோ, பல்லிழந்த சூரியனுக்குப்பற் கொடுத்தாரோ, உலகத்

திற்றண்ணீரில்லாமல் முழுதும் வறண்டகாலத்தில் ஐந்து தீர்த்தத்தை யுண்டுபண்ணினாரே, அவருக்குச் சமானம் எவ்விடத்துமில்லை. மந்திரங்களுட் பஞ்சாக்ஷரமும், விரதங்களுட் சோமவாரவிரதமும், மலைகளுள் மேருவும், பசுக்களுட் காமதேனுவும், யானைகளுள் ஐராவணமும் போல் மூர்த்திகளுள் நெல்லிவன நாதர் விசேடம்.

ஒவ்வொரு நாளும் மத்தியான காலத்தில் நெல்லிவன மகாலிங்கத்தைத் தெரிசிக்க முப்பத்து முக்கோடி தேவரும் ஏனையோரும் வருகிறார்கள். இம்மகாலிங்கத்தைத் தினந் தினந் தெரிசித்தால் அன்றன்று செய்த பாவம் போம். சூரியனைக்கண்ட விருட்டும், சிங்கத்தைக் கண்ட யானையும் போல ஆமலகேசனைக் கண்ட அஞ்ஞானம் போம். கருடனைக் கண்ட பாம்பும், நெருப்பைக் கண்ட பஞ்சும் போல இம்மகாலிங்கத்தைக் கண்டவர்கள் பாவம் போம். காலையில் நெல்லிவன நாதனைத் தெரிசித்தால் ஆயிரம் கோதான பலனும், மத்தியான்ன காலத்திற் றெரிசித்தால் பயிர் நிறைந்த பூதான பலனும், மாலையிற் றெரிசித்தால் வாஜபேயம் முதலிய மகா யாக பலனும், இரண்டாங் காலத்திற் றெரிசித்தால் சமஸ்தமான பலனும், அர்த்த ஜாமத்திற் றெரிசித்தால் அர்த்தோதய மகோதய புண்ணிய காலத்திற் புண்ணிய தீர்த்த ஸ்நான பலனுங் கிடைக்கும். இம்மகிமையெல்லாந் தெரிந்து பஞ்ச தீர்த்த ஸ்நானஞ்செய்து எல்லாக் காலங்களிலும் ஆமலகேசனைப் பக்தி சிரத்தையோடு ஒருவன் தெரிசிப்பானாயின் சகல பாவமும் நீங்கி இம்மையில் மகா போகங்களை யனுபவித்து, மறுமையிற் சுவர்க்கானுபவத்தையும் பெற்றுமுடிவில் எம்பெருமான் திருவடித்தாமரையையு மடைவான்.

ஆமலகேசன் மகிமையை பக்தியாய்க் கேட்டாற் பத்து ஜன்மங்களிற் செய்த பாவம்போம். சிரத்தையாய் நினைத்தால் நூறு ஜன்ம பாவம்போம். ஆமலகேசனைத் தெரிசிக்கவேண்டுமென்று நினைத்து மூன்றடி யெடுத்து வைத்தாலும் ஆகாமியம், சஞ்சிதம் பிராரத்தம் மூன்றும் நாசமாகும்.



பஞ்சதீர்த்தங்களின் றண்ணீரைப் பொற்குடத்திற் கொண்டுவந்து பொற்கலசத்தாலெடுத்து ஆமலகேசனை உருத்திர மகாமந்த்ர ஜெபத்தோடு அபிஷேகஞ்செய்வித்தால் செய்த பாவங்களெல்லாங்கழுவுண்டு இருவினையொப்பு மலபரி பாகம் பெறுவான். பஞ்சகவ்யம், பஞ்சாமிர்தம், பால், தயிர், கருப்பஞ்சாறு, எலுமிச்சை யாதிபழச்சாறு, இளநீர், சந்தனாதியபிஷேகஞ்செய்பவர் பலனுக்கெல்லையில்லை. குங்குமப்பூ, பசைக்கற்பூரம், கஸ்தூரி புழுகு முதலிய கலந்த சந்தனக்கலவையால் இச்சிவலிங்கத்தின் திருமேனிமுழுதும் சாத்தினாற் கற்பூரம்போற் சுத்ததேகத்தையும் அதில் என்றும்மாறாத வாசனையையும் அடைவான்.

நெல்லிவன நாதனுக்கு ஒரு பூச்சாத்தினால் ஆயிரம் பொற்பூச்சாத்திய பயன்கிடைக்கும். ஒருதரம் ஆமலகேசனுக்கு நல்ல தூபம் காட்டினால் அநேக பாவங்கள் சாம்பலாகும். ஆமலகேச சந்நிதியில் தாமரைநூற்றிரிவிட்டு நெய்த்தீபமிட்டால் முந்நூற்றறுபத்து நான்கு சிவாபராதநீங்கும். ஒருபடி யரிசியைப் பரிசுத்த பாத்திரத்திற் பாகஞ்செய்து சுத்தான்னமாக நிவேதித்தாலும், அவன் மூன்று ஜன்மம் மகாபாபியாயிருந்த போதிலுஞ் சிவபெருமான் திருவடித்தாமரைக்கருகணுகிறான். ஏலந்தக்கோலமுதலிய பஞ்சவாசங் கூட்டிய நல்லதாம்பூலத்தை நிவேதித்தால் நித்தியா மிர்தபதவியை யடைகிறான். நெல்லிவன நாதர் பூஜைக்குத் தூபக்கால் தீபக்கால் முதலிய பூஜாபாத்திரங்களை எவன் கொடுக்கிறானோ அவன் சகலபாப முத்தனாகிறான். நெல்லிவன நாதர் சந்நிதியில் வீணை, மிருதங்கம் முதலிய சங்கீத வாத்தியங்களை வாசிப்பதாலும், நிருத்தஞ்செய்வித்தாலும், பாடுவித்தாலும் அவன் மூவுலகத்தரசர்களாலும் வணங்கப்படுவான்.

நெல்லிவன நாதர் திருச்சந்நிதியிற் செய்யப்பட்ட செபம், தானம், ஓமம், தவம் முதலியன சிறிதாயினும் பெரும்பயன் தரும். திருநெல்லிக்காவுக்கு ஸமானமான தலமும் பஞ்சதீர்த்தத்திற்கு ஸமானமான தீர்த்தமும் ஆமலகேசனுக்கு ஸமானமான மூர்த்தியும் மூவுலகிலும் இல்லைஇல்லை.

மூர்த்திவிசேடப் படலம் முற்றிற்று.

# 5வது சூரிய தீர்த்தப்படலம்.

முனிசிரோமணியே! திருநெல்லிக்காவில் ஆமலகேச சந்நிதியிலுள்ளது சூரியதீர்த்தம். அதன் மான்மியமும் அப்பெயர் வந்த காரணமும் நானறிந்தபடி ஒருவாறுரைப்பேனென்று அயக்கிரீவர் சொல்லாரம்பினார்.

வானகத்துலாவுகின்ற தேவகணங்களுட் சூரியன் மிகச் சிறப்புவாய்ந்தவன். சிவபெருமான் வலக்கண்ணாயிருக்கப் பெரும்புண்ணியஞ் செய்தவன். வேதாதிகளாற்றிருமூர்த்திகளுக் [illegible]ரனேயென்று கூறப்பெற்றவன். சிவபெருமானெழுந்தருளிய திருத்தலங்களிலும் ஏனையவிடங்களிலும் நித்திய நைமித்திகம் வழுவாது நடைபெறும்படி தினங்களை வரையறுத்துக்காட்டலால் தினகரனென்னும் பெயர் பெற்றவன். ஏழ்புரவி பூட்டிய ஒரேசக்கரமுள்ள மகாரதம் ஊர்ந்து உலகமுழுதுந் தினமோர் முறை வலம் வரும் பேராற்றலுடையான்.

சிறுமதியென்னுந் தக்கன் சிவபெருமானை நீக்கி ஒருயாகஞ் செய்யக்கருதித்தன் ஆணைக்கஞ்சிய தேவர் முனிவர்களையழைத்து யாக நடத்தும்போது சிவபெருமான் தமதருளாலவதரித்த வீரபத்திரரை நோக்கி வீரனே! நீ நம்மையிலக்கியாகஞ்செய்கின்ற தக்கனிடம் சென்று நமது யாகமாகிய அவியினைக்கேள் தந்தால் வாங்கிக்கொண்டு திரும்பு. தாராவிடில் அவனையுங் கொன்று அங்குச் சூழ்ந்தோரையுந் தண்டிப்பாயாக என்றாணை தந்தருள, அதனைச்சிரமேற்கொண்டு வீரபத்திரர் பூதகணஞ் சூழத்தக்கன் யாகசாலை நோக்கிச் சென்றருளினார்.

அங்ஙனஞ்சென்று யாகசாலைக்குச் சமீபித்த அளவில் அவ்விடம் கூடியிருந்தவர்கள் நடுநடுக்கமுற்றுச் சிலர் யாகசாலையை விட்டோடினார், சிலர் உருமாறி நழுவினார். இந்திரன் குயிலுருவாயோடினான். அக்கினிதேவன் நாவறுப்புண்டான். சந்திரன் தன்னுடல் வீரபத்திரர் பாதமலரினாற்றேய்க்கப்பட்டான். சிறுவிதி தலையற்றான். மற்றும் பலதேவர்கள் பலவித தண்டனைகள்



குற்றத்துக்குத் தக்கபடி விதிக்கப்பட்டனர். சூரியன் பற்களுடைபட்டான், கண்பிடுங்கப்பட்டான்.

இவ்வாறு பல்லுங்கண்ணுமிழந்த சூரியன் - என்விதியிருந்தவாறென்னே. உலகுக்கெல்லாமொளி கொடுக்குமெனக்குப் பல்லொளி போயிற்றே! பல்லெல்லாம் உடைபட்டனவே! இனி என் செய்வது எனப் பலவாறு நைந்துருகி மேருவையடைந்து அதன் சாரலில் ஆயிரமாண்டு தவம்புரிந்தனன். அவனது தவத்துக்கிரங்கிய சிவபெருமான் திருவருளாலோர் அசரீரியுண்டாயிற்று. சூரியனே, நீ யிவ்விடத்துக்கடுந்தவமியற்றிப்பயனில்லை. நீ செய்த சிவாபராதம் கர்மபூமியிலன்றி விமோசனமாகாது. ஆதலிற் கர்மபூமியிற் காவிரிக்குத் தென்பால் நெல்லிவனமென்றோர் திருத்தலமிருக்கிறது. அங்குச்சென்று புண்ணிய தீர்த்தஸ்நானம் செய்து ஸ்ரீ ஆமலகேசனை வழிபடுவாயாயில் உனதெண்ணம் கைகூடும் என்று கூறியது.

அதுகேட்டுச் சூரியன் ஆனந்த பரவசனாய்ச்சிவபெருமான் திருவருளை நினைந்து நினைந்துருகித் தென்றிசை நோக்கிச்சென்று வழியிலுள்ள காசி, கோகன்னம், திருப்பருப்பதம், திருக்காளத்தி, காஞ்சி, சிதம்பரம் முதலிய புண்ணிய தலங்களைத் தெரிசித்துக், கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கி, காவிரிக்கரைவந்து, அப்புண்ணிய நதியின் மூழ்கித் திருவிடை மருதூர் மாயூரம் முதலிய திருத்தலங்களைச் சேவித்துத் திருவாரூரையடைந்தான். அத்திருநகரின் எல்லை, திருவீதி, கோபுரம் முதலியவற்றை வணங்கிப்போய்ப்பூங்கோயிலுட்புகுந்து, ஸ்ரீவன்மீகேசர் தியாகராஜர் திருச்சந்நிதியடைந்து, தரிசித்து, வணங்கித் துதித்துத், தெற்குநோக்கிச் சென்று, திருநெல்லிக்காவின் எல்லையையணுகினவனாக அவ்வெல்லையை வணங்கி வலமாகச் சென்று வீதிவலம் வந்து தீர்த்தக்கரையை யடைந்தான்.

அடைந்த சூரியன் விபூதிருத்திராக்ஷதாரணத்துடன், மகாசங்கற்பஞ்சொல்லி மூழ்கினான். மூழ்கியெழுந்ததும் தான் இழந்தபல்லும் கண்ணும் பெற்றதுமன்றி முன்னையினும் ஆயிர

மடங்கு ஒளிமிக்கவனாய் விளங்கினான். பின்பு நித்தியகர்மானுஷ்டானமுடித்துக்கோயிலுட்புகுந்து, நெல்லிவனநாதரையும்மங்களநாயகியையும் ஆகம விதிப்படி, அபிஷேக தூப தீப நைவேத்திய சோடசோபசார சகிதமாய்ப் பூசித்து அப்பூஜாபலனைச் சிவவாமகாத்திற்றத்தஞ் செய்து, அடியற்ற மரம்போல் திருமுன் வீழ்ந்து வணங்கித் துதிப்பானாயினன் - சர்வலோகசரண்ய, நிர்குணா நிராலம்ப, பூதநாத, சர்வேச, புண்ணிய புராணரே உமது திருவடிகளைத் துதிக்கின்றேன். சிற்றறிவினையாகிய எளியேங்கள் செய்த பிழையெல்லாம் பொறுத்தருள்வது தங்களுடைய பெருமைக்குத்தக்கதன்றோ. தங்களையிகழ்ந்து தக்கன் செய்த யாகத்தை வீரபத்திரரைக் கொண்டழித்ததும் திருவருட்செயல்களிலொன்றே. தங்கள்பெருமையையும்தக்கன்சிறுமையையும்நோக்காது அம்மகத்திற்குச்சென்றதுபெருங்குற்றமே, அக்குற்றத்திற்கு வீரபத்திரர் தண்டித்தது தக்கதே என்றிவ்வாறு சூரியன்புகன்றது கேட்டு நெல்லிவனநாதர் உமாதேவியாரோடும் இடபாரூடராய் அவனெதிர் தோன்றியருளினார். அத்திருவருளுருவந்தெரிசிக்கப் பெற்ற சூரியன்வலம் வந்து திருமுன்வணங்கினான். சிவபெருமான் அவனை நோக்கி—சூரியனே! நீ செய்த பூசையாலும் துதியாலும் மகிழ்ந்தனம். நீ வேண்டும்வரம் சொல்லுக—என்றருளினார். சூரியன் இத்திருத்தலத்திற்கு வந்து, இப்புண்ணிய தீர்த்தத்திற் படிந்தவுடனே நான் இழந்த பல்லும் கண்ணும் பெற்றேன். தங்களையும் அம்மையையும் தெரிசித்துப் பூசிக்கப்பெற்றேன். இனிவேண்டுவதியாவது? இத்தீர்த்தம் சூரியதீர்த்தமென விளங்கவும், இதில் ஆவணி, கார்த்திகை, மாதங்களில் என் வாரமாகிய ஞாயிற்றுக்கிழமைகளில் மூழ்குவோர் பிறவிக்குருடராயினும் அவருக்குக் கண்ணொளியுங் கொடுத்து மற்றெந்த நோயையும் நீக்கியருளவும் வரந்தருதல் வேண்டுமென்று வணங்கினான். அப்படியே யாகுக வென்றருளிச் சிவபெருமான் மறைந்தருளினார்.

அதுமுதலத் தீர்த்தம் சூரியதீர்த்தமெனும் பெயரால் விளங்கித் தன்னிடத்து மூழ்குகிறவர்களுக்கு இட்டசித்திகளைக் கொடுத்து வருகின்றது.



இவ்வரம் பெற்ற சூரியன் இரதமேறி வானகஞ் சென்றனன்.

சூரியதீர்த்தப்படலம் முற்றிற்று.

---

## ஆறாவது பிரமதீர்த்தப்படலம்.

பிரமதேவன் ஆதியிற்சிவபெருமானாற் சிருட்டித்தொழில் கொடுக்கப்பெற்றவன். விஷ்ணுமூர்த்தி ருத்திரமூர்த்தியோடுஞ் சேர்ந்து மும்மூர்த்தியென்றெண்ணப் பெற்றவன். சரஸ்வதி தன்னுள்ளிருக்கப் பெற்றவன். வேதங்களாற் சிவபெருமானை இடைவிடாது துதிப்பவன். பிராமணகுலத்திற் கதிபனாயுள்ளவன்.

இத்துணைச் சிறப்புவாய்ந்த பிரமதேவனுக்குஞ் சிவபெருமானைப்போலவே ஐந்து முகங்களிருந்தன. காலதேச விசித்திரத்தால் இவன் ஒருகாலத்திற் செருக்குக் கொண்டு நானுமைந்துமுகமுள்ளவன். பரமசிவனுக்கும் அப்படியே. நான் சிருட்டித்தொழில் செய்பவன். அவன் சங்காரத்தொழில் செய்பவன். அவனுக்கு உமாதேவி சக்தி, எனக்குச் சக்தி சரஸ்வதி. இவையெல்லாம் ஒத்திருத்தலால் அவன் என்னிலும் என்ன விசேடமுள்ளவன். அறிவிலாத தேவர்கள் என்னிலும் அவனுக்கு விசேடச் சிறப்புச்செய்யுங் காரணம் யாது? ஏன் கைலைமலையை யடிக்கடிபோய்ச் சூழுகிறார்கள். இப்பொழுது கூட விஷ்ணு இந்திரன் முதலியோர் யாவரும் கைலைக்கேகியிருக்கின்றார்கள். இப்பொழுது யானும் அக்கைலைக்கேகி, பரமசிவனைப் போல யானும் சிறப்புடையவன் என்பதை அங்கேகூடிய தேவர் யாருங்காண அவனுக்கெதிரே வீற்றிருத்தலினாற்றான் அத்தேவர்க்கென்னிடம் மதிப்புண்டாகும் என்றெண்ணித் திருக்கைலையை நோக்கிச் சென்றான். செல்லும் போது அத்திருக்கயிலைச் செம்பொற்றிருக்கோ

யிலே விஷ்ணு இந்திராதி தேவர் முனிவர் யாவரும் தங்கள் தங்கள் குறை நிறை கூறி அடிக்கடி வணங்கி வேண்டி நிற்ப வாணகுண்டோதர சங்குகர்ணாதிகண நாதர்கள் உரிமைப்பணி புரிந்தொழுக்க நிற்ப மந்திரமய திவ்விய ரத்தின சிங்காதனத்தின்மீது லோகமாதாவாகிய பார்வதி சமேதராய் மந்தகாச மலர் முகத்தினராய்க் கொலு வீற்றிருந்தருள்கின்ற சிவபெருமான் திருநந்தி தேவரை அழைத்தவராய் நந்திதேவனே பிரமன் மிச்செருக்கோடு இங்கு வருகின்றான் அவனைச்சிறிதுந்தடையின்றி வரவிடுவாயாக வென்றாஞ்ஞாபித்தருளினர். சிரமேற்கொண்டு திருநந்தி தேவர் தமது முதற்பெருவாயிலில் வந்து வீற்றிருந்தருளினர்.

செருக்கு மேற்கொண்டு வருகின்ற பிரமன் அதிவேகமாய்க் கைலைக்கோயில் வாயிலைக் குறுகி தடையின்றி யுட்புகுந்து திருமுன்வருமளவிற் சிவபெருமான் பிரமனே வருகவென்றருளினர். செருக்கினால் மதிமயங்கிப் பித்தேறிய பிரமன், அது கேட்டும் வந்தனை செய்யாது வாளாநின்றனன். சிவபெருமான் பிரமனே உனது சிருட்டித்தொழில் முட்டின்றி நடை பெறுகின்றதா? நீ யிங்குவந்த செயல் யாது? என்று மேலுங்கேட்டருளினர் உடனே பிரமன் உமக்கும் ஐந்து முகமுள்ளன எனக்கும் ஐந்து முகமுள்ளன. நான் சிருட்டித்தொழில் நடத்துகின்றேன். நீர் சங்காரத்தொழில் செய்கின்றீர். ஆதலால் நீர் என்னினும் சிறந்தவரல்லர். இப்படியிருக்க இத்தேவர்கள் உம்மை என் என்னினும் சிறந்தவராகக்கொண்டாடுகின்றனர். என் பெருமை சிறிதோ? இதை உமக்கு முன்னரே இத்தேவர்க்குத் தெரிவித்தற்கே வந்தேன் என்றனன். உடனே எம்பெருமான் சிறிது கோபக்குறிப்புக்காட்டியருளினர். விஷ்ணு இந்திரன் முதலிய தேவரும் முனிவரும் இக்கோபம் எவ்வாறு முடியுமோவென்று நடுநடுங்கினர்.

பின்பு சிவபெருமான் பிரமனையிங்கு வருகவென்றாஞ்ஞாபிக்கப்பிரமன் மிகச்செருக்குற்றிருந்தானாயினும் பச்சோந்தியைக் கண்டு மதிமயங்கித்தானே போய்த்தன் கண்ணைப்பிடுங்கக்கா



டும் மயில்போலச்சமீபத்திற் சென்றனன். சிவபெருமான் தமது திருக்கரத்தை நீட்டி அங்குஷ்டம் தர்ச்சனி என்னும் திருவிரல் நகங்களால் அவனது ஐந்தாவது சிரத்தைக்கிள்ளி நீக்கித்திருவாய் மலர்ந்தருளுகின்றார்.

வாராய் பிரமனே! நாம் உன்னைச் சிருட்டித்துப் பஞ்சகிருத்தியங்களுளொன்றாகிய சிருட்டித்தொழிலை உனக்குத் தந்தனம். அம்மட்டோ நம்முடன் சேர்ந்து எண்ணத்தக்க பதத்தையும் ஐந்து சிரத்தையும் கொடுத்தனம். நீ செய்த அருந்தவத்தால் இவ்வாழ்வு பெற்றனை. பெற்றிருந்தும் நீ பசு வர்க்கத்தினை யாதலால் நம்மை உனக்கு சமமாக நினைத்து அகங்கரித்தனை. இதற்குக் காரணம், நம்மைப்போல் உனக்கு இருந்த ஐந்து சிரமும் நீயடைந்த பதவியாகிய சிருட்டித்தொழிலுமே தான். ஆதலின் உனது ஐந்தாவது சிரசைக்கிள்ளிச் சிருட்டித்தொழிலையும் நீக்கிவிட்டோம். உன்னையன்றிச் சிருட்டி நடவாதென்று நினையாதே. நமது பூதகணங்களுள் ஒரு சிறுவன் (இந்தச்சிருஷ்டி மாத்திரமா?) பஞ்ச கிருத்தியங்களையும் பிரயாசையின்றி மிக லேசாய் விளையாட்டு மாத்திரமாய்ச்செய்வன். இது பெரிதல்ல, ஒரு சிறு துரும்பைக் கொண்டும் ஐந்து தொழிலும் செய்விப்போம் என்றருளினர்.

இத்திருவருள் வாசகம் செவிப்புகும் பேறு பெற்ற பிரமன் உடனே செருக்கு முற்று நீங்கி ஐந்தாவது சிரசும் சிருட்டித்தொழிலும் இழந்ததுமன்றிக் கோபத்துக்கும் சிவாபராதத்திற்குமாளானதை நினைந்து நடுநடுங்கி உள்ளுடைந்து இடியேறுண்ட அரவம்போல் ஒடுங்கி அறிவழிந்து, திருமுன் நெடுநேரம் வீழ்ந்து கிடந்து ஒருவாறு சிறிதறிவு தோன்றத்தாயினால் அதட்டுண்ட குழவிபோலத் தேம்பித் தேம்பியழுது ஒன்றுஞ்சொல்ல நாவெழாமற் குழறியொருவாறு சொல்வானாயினன்.

'தயாநிதே! கருணைக்கடலே! பேரறிவும் பேராற்றலும் உடைய பெருமானே! சிற்றறிவுடையேன் செய்த பெரும்பிழையைத் தேவரீரன்றிப் பொறுத்தருளுவார் யாவர்? பொறுத்தரு

ளாது தண்டித்தபடியே விடின் நாயேற்கு உய்யும் வழி வேறுள்ளதோ? எளியேன் செய்த பிழை எவற்றினும் பெரிதே. இதற்கென்னைச் சாம்பராக்கினும் சித்திரவதை செய்யினும் போதாதே. தேவரீரை நாயினும் கடையேனாகிய எனக்கு நிகரென்று நினைத்த நெஞ்சைப் பிளந்தாலென்? சொல்லிய நாவை அரிந்தாலென்? நாயேன் மீது வைத்த கருணையினாலன்றோ சிறிது தண்டித்தனை. இப்பெருங்குற்றத்தை நோக்கத் தண்டனை சிறிதாயினும் அதை யான் பொறுக்கும் ஆற்றலுடையேனல்லேன். எம்பெருமானே திருவுளத்திற் சிறிதும் சீற்றம் வரச்செய்த யான் இனி உயிர்வைத்திருந்து பயன் என்ன? இச்சிவாபராதத்தைத் தீர்த்து முன் போல் அடிமைகொண்டருளினாலன்றிச் சீவிக்கக்கருத்துக்கொண்டிலேன். நாயினுங்கடைப்பட்டு யாவராலும் இழிக்கப்பட்டு வாழ்வதினும் இறத்தலே நலமென்றரைந்தழுது கிடந்தான்.

சிவபெருமான் அவனிடத்திற்கருணைகூர்ந்து பிரம, நீ இவ்வாறு வருந்துதலாற் பயனில்லை. நீ செய்த சிவாபராதம் மிகப் பெரிது. எளிதிற் போக்கமுடியாது. அன்றியும் நமது சாபம் அனுபவித்தாலன்றித் தீராது. ஆயினும் நீ பெருங்குற்றஞ் செய்தேனென்று இரங்குவது நோக்கி ஓர் உபாயம் கூறுகின்றோம். கன்மபூமியிற் சோழநாட்டிலே திருவாரூரின் தென்பால் திருநெல்லிக்காவென்றொரு புண்ணிய க்ஷேத்திரமிருக்கிறது. அவ்விடம் நீ சென்று ஆமலகேசனென்னும் நமது சிவலிங்க மூர்த்தியையும் நம்மிடம்பிரியாத சக்தியாகிய மங்களநாயகியையும் பூசை செய்வாயாயின் நீ செய்த பாவம் தீரும் என்று திருவாய்மலர்ந்தருளினார்.

உடனே பிரமன் பரமசிவனுக்குத் தன்பால்வந்த கருணையை நினைந்து நினைந்து மனமுருகித் திருமுன்பு பணிந்து விடைபெற்றுக்கொண்டு தென்திசை நோக்கிச் செல்லலாயினன்.

சென்ற பிரமன் காசியை யடைந்து, கங்கையாடி, விச்வே



சனையும் விசாலாக்ஷியையும்வணங்கி கேதாரம் கோகருணம், திருப்பருப்பதம், காளத்தி. காஞ்சி, சிதம்பரம், மாயூரம், திருவிடைமருதூர் முதலிய தலங்களைத் தெரிசித்துக் காவிரியாடிப் பராசக்தி க்ஷேத்திரமாகிய திருவாரூரை யடைந்தனன்.

திருவாரூருட் புகுந்து வீதி முதலியனவற்றை வணங்கி வலம்வந்து கமலாலய தீர்த்தத்தில் விதிப்படி மூழ்கித் திருநீறணிந்து நித்திய கருமம் முடித்துக்கொண்டு திருக்கோயிலுட் புகுந்து தேவாசிரியனுக்கெதிரே வணங்கியுட் புகுந்து திருவாயிலிற்புக்குத் திருமூலட்டானமுதலிய முறையே தெரிசித்து வீதிவிடங்கப் பெருமான் திருமுன் சென்று கண்ணீர் சொரிய மெய் புளகிப்பத் தெரிசித்து வணங்கித் துதித்து நின்று பிரியாவிருமையின் வருந்தியபின் விடைபெற்று அவ்விடம் விட்டு நீங்கித் திருநெல்லிக்காவை நோக்கிச்சென்றான்.

இங்ஙனஞ் சென்ற பிரமன் ஆமலகவனத்தின் எல்லையை யடைதலும், தன்னையறியாது உள்ளக்கிளர்ச்சி மிகத் திருவெல்லையை வணங்கி, நகருட்புகுந்து, திருவீதியை வணங்கி வலம் வந்து, சூரியதீர்த்தத்துட்படிந்து, ஆமலகேசனையும் மங்களநாயகியையும் பூசித்து துதித்து இத்திருத்தலத்தில் ஓராண்டு வசிக்கும் நியதிபூண்டிருந்தான்.

இவ்வாறு வசித்த பிரமன் அம்மைதிருமுன் தன் பெயரானோர் திருக்குளம் அமைத்து அதில் முக்காலமும் மூழ்கித் தவஞ்செய்து அம்மை அப்பரைக் காலந்தோறும் பூசித்து அவ்வனத்துள்ள முனிவரோடு அளவளாவிக் கொண்டிருந்தான். வருஷமொன்றும் எளிதில் நிரம்பியது.

அவ்வருடமுடிவுநாளில் வழக்கப்படியே தானமைத்த திருக்குளத்தில் மூழ்கிக்கடன் முடித்துக் கோயிலுட்புக்கு நெல்லிவன நாதர்க்கும் மங்களாம்பிகைக்கும் நித்தியஞ் செய்வதினும் அதிக விசேஷமாய் நைவேத்தியாதி சிறப்புப்பூசை முடித்து பன்

முறை வணங்கிச் சிரமேற்கை குவித்து நின்று நெல்லிவனநாத! சர்வலோக சரண்ய! மலைமகள் கொழுந! திக்கற்றவர் துணைவ! உனது சரணாரவிந்தமன்றி யடியேனுக்குத் துணையுமுண்டோ? நானறியாது செய்த பிழையைப் பொறுத்தருள் வேண்டும். திருவுள்ளப்பாங்கல்லாத பெரும்பிழை செய்தேனென்று நினைக்கின்றவென் மனமே பெண்ணையரம் போலறுக்கின்றதென்றிவ்வாறிரங்கிப்பற்பல வாய்த்துதித்தான்.

இத்துதி திருச்செவி சாத்திய நெல்லிவனநாதர் மங்களநாயகியுடன் இடபாரூடராய் அப்பிரமன் காணத்தோன்றியருளி பிரமனே! இத்தலத்தில் நீ போராண்டு வசித்தமையின் நீ செய்த சிவாபசாரம் நீங்கியது. உனதன்பினாலும் பூசனையினாலும் துதியினாலும் மனமிக மகிழ்ந்தனம். நீ வேண்டும் வரம் கேள் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பிரமனதேவாதி தேவனே! மிகப்பெருஞ் சிவத்துரோகியாகி எளியேனிடத்தும் திருவருள்புரியப்பெற்றேன். இதன்மேலும் வேறு வரம்யாதுளது? ஆணையை மறுத்தற்கும் அஞ்சினேன். எம்பெருமானே எளியேங்கள் இனிமேலும் எவ்வோர் காலங்களில் அறிவிழந்து செருக்குறினும் உடனே உணர்ந்துய்தற்கோர் ஞாபக சின்னமாய் அடியேன் ஐந்தாஞ்சிரசு நீங்கியபடியே நான்குமுகனாகவே யிருக்கவும், இழந்த சிருட்டித் தொழில் மீண்டுங்கிடைக்கவும், இத்திருத்தலத்தில் யான் உண்டாக்கிய இத்திருக்குளம் என்பேரால் இருக்கவும் இதில் மூழ்குவோர் சிவாபராதி சகல பாவங்களினின்றும் நீங்கியுய்யவும் வேண்டுகின்றேன் என்று திருமுன்வீழ்ந்து வணங்கினன். எம்பெருமான் அப்படியே யாகுக என்றருள் புரிந்து மறைந்தருளினார்.

அன்று தொட்டு அத்தீர்த்தம் பிரமதீர்த்தமென்னும் பெயருடன் ஸ்ரீமங்களநாயகி திருச்சந்நிதியில் விளங்குகின்றது.

பிரமதீர்த்தப்படலம் முற்றிற்று.

## ஏழாவது சக்கரதீர்த்தப்படலம்.

லோகரக்ஷணையாகிய காத்தற்றொழிலைச் சிவானுக்கிரகத்தாற் பெற்றவிஷ்ணுமூர்த்தி ஒருகாலத்தில் மிக்கவலியினராகிய அசுரர்களால் வரும் இடையூறு நோக்கி அத்துஷ்டர்களைக் கொன்றாலன்றி நமது காவற்றொழில் நடைபெறாது. அவரைக்கொல்லுவதற்கின்றியமையாததாய் நமக்குயிர்த்துணைபோல்வதாயோராயுதம் வேண்டும். அத்துணைவலியுள்ள ஆயுதம் எம்பெருமான் தமது திருவடிப் பெருவிரலால் வலிந்தமைத்து எவரினும் வலிய சலந்தராசுரனுடைய உடலைப் பிளந்த சக்கராயுதமே என்றெண்ணி அதனைப்பெறும் பொருட்டுத் திருவீழிமிழலையிற் சிவபெருமானைப் பேரன்போடு நாடோறும் ஆயிரம் செந்தாமரை மலர்கொண்டு பூசித்து வருங்கால் ஒருநாள் ஒரு மலர்குறையத் தனது கண்ணையே மலராகப் பெயர்த்தெடுத்துப் பூசித்த அளவிலே, எம்பெருமான் அவ்வன்பிற்கெளிவந்து அச்சக்கராயுதத்தைக் கொடுத்தருளினார். விஷ்ணுமூர்த்தி திருக்கரம் நீட்டி வாங்குதலும் அச்சக்கரத்தைச் சிவபெருமான் அணிந்திருந்த தலைமாலையிலுள்ள ஒரு தலை கவ்வியது. கவ்விய சக்கரம் பெறுதற்கு இதுவே உபாயம் என்று தன்சேனைத்தலைவனாகிய விடுவசேனனைக் கை, கால் முகம் முதலிய அங்கங்களை வளைத்து விகடக் கூத்தாடுவித்தான். அதுகண்டு அத்தலைசிரித்தது. உடனே சக்கரம் கீழ்விழ அதனை அவ்விஷ்ணுமூர்த்தி கைக்கொள்ளுமுன் விநாயகப்பெருமான் கவர்ந்தனர். பின்பு திருமால் விநாயகர் முன்னும் விகடக் கூத்தாடுவித்து அவரை நோக்கித் தவமும் செய்தனன். விநாயகக்கடவுள் ஆகுவாகனத்தின் மீது தோன்றியருளி புருடோத்தமனே! தென்றிசையில் ஆமலகவனமென்னும் ஓர் புண்ணிய க்ஷேத்திரமிருக்கிறது. நீ யங்குச் சென்று ஆமலகேசனையும் மங்களநாயகியையும் பூசித்திருத்தியாயிற் சக்கரம் கைவரும் என்று ஆஞ்ஞாபித்தருளினார்.

பின்பு திருமால்தெற்கு நோக்கிச்சென்று வழியிலுள்ள திருத்தலங்களை யெல்லாம் தரிசித்துத் திருவாரூரை யடைந்தனன். அவன் வீதிவலம்வந்து திருக்கோயிலுட் புகுந்து வன்மீக நாதர் சந்நிதியிற் சென்று அவர் உலகுய்யுமாறு அங்கட் கோயில் கொண்டருளியதற்குத்தன் செருக்கே முன்காரணமானதை நினைந்து மனமுருகி வணங்கி, வீதிவிடங்கப்பெருமான் திருமுன் சென்று தன் இதய கமலத்திருந்த அந்த மூர்த்தியைப் பரவசனாய்த் தரிசித்து வணங்கித்துதித்துத்திருமுன்னின்றும் பிரியமனமில்லாதவனாய் ஒருவாறு வெளிவந்து திருநெல்லிக்காவை நோக்கிச் சென்றனன்.

சென்றதிருமால் ஆமலக வனஞ் சமீபித்தவளவில் அவ்வெல்லையை வணங்கியுட் புகுந்து வீதிவலம்வந்து சூரியதீர்த்தம் பிரமதீர்த்தங்களில் விதிப்படி மூழ்கித்திருக்கோயிலுட் சென்று நெல்லிவன நாதரையும் மங்களநாயகியையும் வணங்கிப் பூசித்துத் துதித்துச் சிலகாலந் தங்கியிருந்தனன்.

இவ்வாறு வசிக்கிறதிருமால் ஆமலகேசர் கோயிலின் வாயு திசையில் ஒரு தீர்த்தம் உண்டாக்கித் தினந்தோறு மதில் ஸ்நானஞ்செய்து அன்புபெருக எம்பெருமானை விதியாக வழிபடுவானாயினன்.

இப்படியே சிலகாலம் கழிய ஒரு நாள் தனது இட்டசித்தியை நினைந்து வழக்கத்திலும் விசேடமாய் ஆமலகேசனைப் பூசித்துத்துதித்து நின்றனன். அப்பொழுது திருவருளால் ஓரசரீரி எழுந்தது. மாதவனே! நின் எண்ணம் முற்றப் பெறுங்காலம் நெருங்கிவிட்டது. நீ யமைத்தகுளத்துட் சென்று மூழ்குக என்று கூறியது.

அது கேட்ட திருமால் ஆனந்த பரவசனாய்த்திருமுன் வணங்கிச்சென்று அக்குளத்தில், திருநீறிட்டுப், பஞ்சாக்ஷரம் ஜபித்து மூழ்கினன். அங்ஙனம் மூழ்கிய விஷ்ணு அந்நீரின் மேலெழும்பொழுது அவன் கரத்திற் சக்கராயுதம் விளங்கியது. இவ்



வற்புதத்தையுந் திருவருளையுநினைந்து திருமால் மெய் பொடிப்பக் கண்ணீர்வார நின்றனன். தேவர் பூமழை பெய்தார்கள். வான துந்துபி முழங்கின. ஆகாயத்தில் இடப வாகனத்தின்மீது உமாதேவியாரோடும் சிவபெருமான் எழுந்தருளிக் காட்சிகொடுத்தருளினர். தரிசிக்கப்பெற்ற அத்திருமால், கரையேறி, வலம் வந்து, வணங்கித்துதிப்பானாயினன். நீலகண்ட, பரமேட்டி, உன் திருவருளின் பெருமையை யெவ்வாறுரைப்பேன். இச்சக்கராயுதத்தை எனது திதித்தொழினிரம்பும்பொருட்டுத் தந்தருளினை. அது கைவிட்டுநீங்க, இன்று, இத்திருத்தலத்திற் கண்டோர் வியப்பெய்த மீட்டுங் கொடுத்தருளினை. அடியவரிடுக் கண்டீர்த்தருள்வதுன்றொழிலேயன்றோ. இச்சக்கராயுதம் இதில் எனக்குக்கிடைத்தமையின், இத்திருக்குளம், சக்கரதீர்த்தமெனப்பெயர்பெற்றுத், தன்னில் மூழ்குபவர் எப்பொருளை விரும்பினாலுங் கொடுத்து எக்காலமும் நிலைபெறுமேலாக என்று விண்ணப்பித்து வணங்கினன்

சிவபெருமான்.—திருமகள் கணவ, இக்குளம் புண்ணிய தீர்த்தத்துண் முதற்றரமானதாய், நீ வேண்டியவாறே மூழ்குபவர்க்கு வேண்டியபயன்களைக்கொடுத்து நிலைபெறும். நீ காத்தற்றொழிலை யிடையூறின்றிச்செய்து வைகுந்தபதத்தின்கண் வாழ்வாயாக என்றனுக்ஞாபித்து மறைந்தருளினர்.

திருமால் சக்கரம்பெற்றமையின் ஆமலகேசர் திருக் கோயிலுட்புகுந்து, நெல்லிவனநாதரையும் மங்களநாயகியையும் வணங்கி விடைபெற்றுத் தன்னுலகு சென்றனன்.

அன்றுமுதலிந் திருக்குளம் சக்கரதீர்த்தமெனப் பெயர் பெற்றுத் தன்னில்மூழ்குபவர்க்கு வேண்டுவனவற்றைக் கொடுத்து விளங்குகின்றது.

சக்கரதீர்த்தப்படலம் முற்றிற்று.

# எட்டாவது ரோக நிவாரண தீர்த்தப்படலம்.

சக்கரதீர்த்தத்தின் கீழ்பால் திருக்கோயிலின் வடபால் ஓர் திருக்குளம் உள்ளது. ஜீவர்களுக்கு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு நோய்கள் உள்ளன. நோய்களவரவர் புண்ணியபாவத்திற்குத்தக்கபடி அச்சீவர்களைப் பிடிப்பன. இவற்றால் வருந்துபவர்க்கு மணிமந்தர ஒளஷதத்தாலும் உய்வு இல்லையாயினும் இத்தீர்த்தத்தில் மூழ்கினால் அந்நோய்கள் முற்றும் நீங்கும். இம்மட்டோ? இத்தீர்த்தின் ஓர்திவலை மேற்படினும் போதியது. இதில் மூழ்கி நோய்தீர்ந்தவரநேகர். அவர் சரித்திரங்களுள் ஒன்று சொல்லுகின்றேன் என்று அயக்கிரீவர் சொல்வாராயினர்.

முன்னொருகாலத்தில் திவ்யரூபன் என்றொரு கந்தருவனிருந்தான். அவன் பெயர்வாய்த்தபடியே அதிதிவ்ய லெக்ஷண ரூபமுள்ளவன். இடைவிடாமற் சங்கீதத்திலேயே காலம் செலவழித்துவந்தான். இசைநூல் முற்றிலுந்தேர்ச்சியடைந்தான்.

இசையானது ஏழுசுரங்களுள்ளது. இவ்வேழுக்கும் ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழெழுத்துக்களும் அறிகுறியாகும். இவ்வேழு சுரத்திற்கும் தெய்வமாவார் சத்தமாதர்கள். பஞ்சாக்ஷரம் ஜபித்தால் சிவபெருமானுக்குத் திருப்தியாவதுபோல, ஏழு சுரங்களாலாகிய இன்னிசைபாடினாற் சத்தமாதர்கள் இன்பமடைவார்கள்.

இவ்வாறாக மேற்கூறிய திவ்யரூபன் தனது இசைக்கல்விச் செருக்கால் சத்தசுரங்களையும் முறைமையாக நேரே பாடாமல் அவற்றை முறித்துப் பின்னப்படுத்திப் பாடத்தொடங்கினான். இப்படி நெடுநாளாகப்பாடி நேரே பாடுவதை முற்றிலுங்கைவிட்டு, பிறழ்ந்து பாடுவதையே தனக்குத்தொழிலாகக்கொண்டான். இன்னிசையின் நாதத்தையே தங்களுக்குருவமாகக் கொண்ட சத்தமாதர்க்கு நேரேபாடுவதெவ்வளவின்பத்தை விளைக்குமோ அவ்வளவு துன்பத்தை மாறிப்பாடுவது விளைத்தது. இவன் அதிகமாய் மாறிப்பாடப்பாட அவரது துன்பம்—அதிகரித்தது.



இத்துன்பம் பொறுக்கமுடியாத அச்சத்தகன்னியர் திவ்யரூபனைப்பார்த்து-நீயெங்களது இசைமயமாகிய உருவத்தை இவ்வாறுகுலைத்து எங்கட்குப் பெருந்துன்பத்தை விளைத்தமையால், உனது நல்லுருக்குலைந்து, மானுடரிலுங்கடையனாய்க்குட்டநோய் அடைந்து அலையக்கடவாய்—என்று சாபம் விளைத்தனர்.

சாபமடைந்த திவ்யரூபன் வரவரத்தன்னொளி மாழ்கிக் குட்டநோயடைந்து, கை கால் குறைந்து, தன்னுலகிழந்து, கருமபூமியையடைந்து. மனிதரினுங்கடையனாய்த் தன்னைக்கண்டோர் வெறுத்துக் கண்மூடி விலகுமாறு, வழுநராய் அலைந்து வருந்தினன். இவ்வாறுழல்பவன் உடம்பெல்லாம் அழுகி நிறை புண்ணுடையவனாய்ச் செயலற்று நடைபோய்ந்து, எவ்வாற்றானும் உய்வின்றி இனி இறப்பதே முடிவென்றெண்ணிப் பெருந்துன்புறுஞ்சமயம், நல்வினைப்பயனால் திருநெல்லிக்காவின் இக்குளக்கரையில்வந்து கிடந்தான்.

ஆமலகவனத்தில் அக்காலத்திற்றவஞ்செய்துகொண்டிருந்த முனிவர் அநேகர். அவருட்சுதன்மரென்பவர் மிகச்சிறந்தவர். இளமை உருவம் நற்குணமுதலிய வாய்ந்தவர். இவரது பத்தினியும் இவருக்குத்தக்க நற்குணமுடையவள். ஒளிமிக்க மேனியுடையாள். முப்பத்திரண்டிலக்கணமும் வாய்ந்தவள். உவமானப்பொருள்களை வென்ற அவையவமுடையாள். இவளது பேரழகையும் கற்புநிலைமையையும் உள்ளவாறெடுத்துப் புகல ஆயிரநாவுடைய சேடனுக்குமரிது.

இம்மாதர் திலகம் காலையிற் கணவனாகிய முனிவர்க்குமுன் எழுந்து அவருடைய சிவபூஜைப்பணிவிடைசெய்வதற்கு, ரோக நிவாரண தீர்த்தத்தில்வந்து மூழ்கிக் கரையேறித்தனது கூந்தலைக்கரங்களாற்றட்டினாள். அதினின்றோர் சிறுதுளி அவசனாய்க் கரையிற்கிடந்த திவ்யரூபன்மேனியிற்பட்டது. அத்துளி அவன்மீதுபடுதலும் சரீரத்துள்ள புண்ணெல்லாம் ஆறிக்குறைந்த கைகால்முதலியன நிறைந்து வலிபெற்று முன்னினும் மிக்கபேரழகும் பேரொளியும் உடையானாயினான்.

அப்பொழுது சிவபெருமான் உமாசமேதராய் இடபாரூடராய் எழுந்தருளினர். அதுகண்ட திவ்யரூபன் வலம்வந்து வணங்கிக்கைகுவித்து வாய்புதைத்துச் சொல்வானாயினன்.—எம்பெருமானே! மெய்யடியார் திருவடியிற்பொடியும் பெறாத எளியேன்மீதிரங்கி, யித்தீர்த்தத்தின்றிவலையால் எனது கொடுநோயையும் சாபத்தையும் நீக்கியருளினீர். கூந்தலிற்றிவலை மேற்படின் ஆசூசமாகும். அவ்வாசூசத்தைப்புண்ணிய நீராடிப் போக்குகவென்றுணர்ந்தோருரைப்பர். இக்கற்புடையுத்தமி கூந்தற்றுளி எளியேனுக்குத்தேவரீர் சடாமுடியிலிருக்குங்கங்கைத்துளியாயது. தயாநிதே! எனது தீராக்கொடுநோயைத் தீர்த்த இப்புண்ணியதீர்த்தம் தன்னில் மூழ்குவோர்க்குத் தீராநோயெல்லாம் தீர்த்து, ரோகநிவாரண தீர்த்தமெனப்பெயர் பெற்று விளங்கும் வரம் தந்தருளுக—என்று பின்னும் வணங்கினன். சிவபெருமான்—அப்படியே யாகுக—என்று திருவாய் மலர்ந்தருளிமறைந்தனர்.

திவ்யரூபன் அம்முனி பத்தினி திருவடியில் வணங்கி, ஆசிபெற்றுத் திருக்கோயிலுட்சென்று, அம்மை அப்பரைவணங்கி விடைகொண்டு விமானமேறித் தன்னுலகஞ்சென்றனன்.

ரோக நிவாரண தீர்த்தப் படலம் முற்றிற்று.

## ஒன்பதாவது சந்திரதீர்த்தப் படலம்.

வீரபத்திரர் தக்கன் யாகத்தையழித்துத் தேவரைத்தண்டித்த சரிதத்தை முன் கூறினோம். அத்தேவருட் சந்திரனொருவன். அவனை வீரபத்திரர் கீழே தள்ளித்தமது பாதகமலத்தினாற் றேய்த்தனர். அவன் அநேககாலம் தவம்புரியினும் தீண்டுதற்கரிய அப்பாதகமலம் தன் மீது படப்பெற்றானாயினும் சிவத்துரோகியாதலால், அங்கங்கள் குறைந்து ஒளிமுழுது மிழந்தனன்.



பின்பு அச்சந்திரன் பிறர் கண்டு தன்னை நகைப்பரெனவெள்கி ஓரொதுக்கிடத்திலிருந்து, என் விதியிருந்தவாறென்னே! என் பெருமையெல்லாம் பார்த்தோர் மகிழும்படியான உருவமும் ஒளியும் தானே. அவை முழுதுமிழந்த என்னிடத்தினி யென்ன நலமிருக்கிறது. தக்கன் செய்த யாகம் சிவபிரானுக்கு விரோதமென்று தெரிந்தும் அங்குச் சென்றமையால் யானும் சிவத்துரோகியாயினேன். இனி என் உருவும் ஒளியும் தருவது அச்சிவனருளேயன்றி வேறில்லை. அத்திருவருளைப் பெறுவதற்கு உபாயம் யாதோ? சூரியன் இம்மகத்திற் பல்லும் கண்ணுமிழந்தனனே. அவற்றைப்பெறுவதற்கு அவன் என்ன செய்கின்றனே அதனையானுஞ் செய்வதே துணிவென்று நிச்சயித்து, அச்சூரியன் இத்திருநெல்லிக்காவில் வந்து பல்லுங் கண்ணும் பெற்றதையுணர்ந்து, உடனே அத்தலமே புகலிடமென்று அவ்விடம் வந்தனன்.

ஆமலகவனத்தையடைந்த சந்திரன் தீர்த்தங்களில் மூழ்கி ஆமலகேசரையும் மங்களநாயகியையும் வலம் வந்து வணங்கித் துதித்துப் பூசித்து அத்திருத்தலத்திற்றவம் புரிந்திருந்தான்.

அநேகமாண்டு அச்சந்திரன் அருந்தவம் புரிந்திருந்துங் காலத்தில் ஓர் நாள் அசரீரி சந்திரனே! நீ செய்த தவத்தால் மகிழ்ந்தனம். நீயிழந்த மெய்யொளி பெறுங்காலம் வந்திலது. அகத்திய முனிவர் தென்றிசை நோக்கி வருகின்றனர். அவர் கமண்டலத்தில் அதிநிர்மலமான கங்கையுளது அதைக்கவிழ்க்கும்படி விநாயகக்கடவுளை நோக்கித்தவஞ்செய்தாயாயில் அவர் அதனைக் கவிழ்ப்பார். கங்கை பெருகியிங்குவரும். அதில் மூழ்கியத்தீர்த்தத்தினால் நெல்லிவனநாதரையும் மங்களநாயகியையும் அபிஷேகித்துப்பூசிப்பாயாகில் உன் கருத்து முற்றுப்பெறும் என்று கூறியது.

இது கேட்ட சந்திரன் திருவருளை நினைந்துருகி அன்று தொட்டு அவ்வனத்தில் விநாயகப்பெருமானை நோக்கித் தவம்புரிந்தனன்.

நெடுங்காலஞ்சென்றபின் விநாயகப்பெருமான் அச்சந்திரன் முன்றோன்றியருளினர். உடனே திடுக்கிட்டெழுந்து வணங்கி வலம் வந்து துதித்து நின்றனன். எம்பெருமான் சந்திரனை நோக்கி வாராய் சந்திரனே? நீ நம்மைக்குறித்துத் தவம் செய்து வருங்காரணம் யாது? உனக்கு வேண்டும் வரம் என்னை?யென்று திருவாய்மலர்ந்தருளினர். சந்திரன் வணங்கி யெழுந்து நின்று எம்பெருமானே! அகத்திய மாமுனிவர் தென்றிசை நோக்கிவருகின்றார். அவரது கமண்டல நீரைச்சிறிது கவிழ்த்தால் அது பெருகியித்தலத்திலும் வரும். அதில் முழுகி அடியேன் மெய்யொளி பெற்றுய்வேன் என்று வேண்டினன். அது திருச்செவி சாத்தியருளிய விநாயகப்பெருமான் சந்திரனே நீ யஞ்சற்க. வேண்டியவாறு செய்வோம் என்றருளினர்.

இஃதிவ்வாறாகத்திருக்கைலையினின்றும் தென்றிசை நோக்கி வருகின்ற அகத்திய மாமுனிவர் கிரௌஞ்சகிரிக்குச் சாபங்கொடுத்து விந்தியகிரியை அமிழ்த்தி லோகோபகாரியாய்க் காசி முதலிய தலங்களைத் தரிசித்து வணங்கிக்கொண்டு குடநாட்டையடைந்து அங்கொரு குளக்கரையிலே தமது தண்டுகமண்டலங்களை வைத்துவிட்டு ஸ்நானம் செய்யவேண்டி அக்குளத்துளிறங்கினர்.

அச்சமயம் விநாயகப்பெருமான் ஓர் காகரூபமாய்ச் சென்று கமண்டலத்தைக் கவிழ்த்தருளினர். அதிலிருந்த கங்கை பெருகிக் காவிரியாறாகச் சோழநாட்டிற் புகுந்து இத்திருநெல்லிக்காவுக்குத் தென்பாற்சென்றது. அதுகண்ட சந்திரன் தாயைக் கண்ட சிசுவைப்போலமிகவிரைந்தோடி மூழ்கிமுன்னிழந்த மெய்யொளி பெற்று மிகவிளக்கமுற்றான். பின்பு நெல்லிவனநாதருக்கும் மங்களநாயகிக்கும் அந்நதி நீரால் அபிஷேகித்துப் பூசித்துத் துதித்து வணங்கினின்றனன். அப்பொழுது சிவபெருமான் திருவருளால் சந்திரனது விமானம் வந்தது. இத்திருத்தலத்தை விட்டு நீங்க மனமில்லாத சந்திரன் திருவருளைக்கமுணர்ந்து ஒருவாறு நீங்கி விடைபெற்று அவ்விமானமேறிச்சென்றனன்.



அன்று தொட்டு இத்தீர்த்தம் சந்திரநதியென்றும் காகநதியென்றும்பெயர் பெற்றுத் தன்னிடத்து மூழ்கினோருக்குச்சகல பாவங்களையும் நோய்களையும் நீக்கி இட்ட சித்தியெல்லாம் கொடுத்து விளங்குகின்றது.

சந்திரநதிப்படலம் முற்றிற்று

## பத்தாவது திருநெல்லிக்காவான படலம்.

முன்னொரு காலத்தில் மகாவிஷ்ணுமூர்த்தி தேவர்களுக்கு அமிர்தங்கொடுத்து இறப்பொழித்து அமரராக்கும்பொருட்டுப் பாற்கடலைக் கடைந்தனன். எத்தொழிலும் விநாயகபூசையின்றித் தொடங்கினால் அத்தொழில் முடிவதுமின்றித் தீங்கும் விளையுமாதலால் அப்பாற் கடலிலெண்ணிய அமுதமின்றி ஆலால விஷம் எழுந்தது. அது கண்ட திருமால் முதலிய தேவர் பயந்தோடித் திருக்கயிலை சென்று முறையிட எம்பெருமான் அதனைக்கண்டத்தடக்கித்திருமாலை நோக்கி, மாதவ, இனியாயினும் விக்கினேஸ்வர பூசை செய்து பாற்கடல் கடையின் எண்ணியபடி அமிர்தங்கிடைக்கும் என்றுஞ்ஞாபித் தருளினர். அத்திருவருளைச்சிரமேற்கொண்டு சென்று திருமால், விநாயகபூசை செய்து தேவாசுரரைக் கொண்டு மீண்டும் கடல் கடையத்தொடங்கினன்.

இவ்வாறு நெடுங்காலங்கடைந்து வருங்கால் காமதேனு, கற்பக விருக்ஷம், சிந்தாமணி முதலியன தோன்றின. அவற்றைத்திருமால் இந்திரனுக்குக் கொடுப்ப அவன் தனதுலகத்தில் வைத்தனன்.

தம்மையடைந்தவர் வேண்டுவனவற்றையெல்லாம் கொடுத்துக்கொண்டு அங்கிருக்கின்ற அத்தருக்கள் ஐந்தும் கொடையிற்றம்மை ஒப்பாரில்லையென்று மிகச்செருக்குற்றிருந்தன. அத்

தருகிழுவிற் பின்னொரு காலத்தில் துர்வாசமாமுனிவர் வந்தனர். அப்பொழுது அத்தருக்கள் அம்முனிவரருக்கு வழக்கப்படி வழிபாடு செய்யாது கர்வங்கொண்டிருந்தன. அதைநோக்கி அம்முனிவர் அத்தருக்களைநோக்கி நீங்கள் மிகச்செருக்குற்றிருந்தமையால் இச்சுவர்க்கத்தை விட்டு நீங்கி மண்ணுலகில் நெல்லிமரங்களாக உழலக்கடவீர், என்று சபித்தனர். உடனே அத்தருக்கள் நடுநடுங்கி முனிவர் பெருமானே அடியேங்கள் அபராதத்தைப் பொறுத்தருளுக என்று பலமுறை தாழ்ந்து வேண்ட அம்முனிவர் சிறிது கோபம் நீங்கி அவற்றை நோக்கி நமது சாபம் அனுபவித்தாலன்றித் தீராது. நீர் அறிவிழந்து பூமியில் உழலுங்கால் ஓர் புண்ணிய தலத்தை யடைவீர். அடைந்ததும் நீரிழந்த பூர்வஞானம் உண்டாகும். உண்டாகவே அத்தலத்திற் சிவபெருமானை வழிபட்டு இச்சாபத்தை நீக்கிக் கொள்ளுதிர் என்று அச்சாபம் நீங்கும் உபாயமும் சொல்லிப்போயினர்.

பின்பு அத்தருக்கள் ஐந்தும் அச்சாப வலியால் தமதுருவமிழந்து நெல்லிமரமாகிச் சுவர்க்கம் நீங்கி பூமியில் வந்து அறிவழிந்து நெடுங்காலம் எங்கெங்குமுழன்று முன்னை ஆகூழ் வசத்தால் இத்தலத்தெல்லையை அடைந்தன. உடனே முன்னீங்கிய அறிவுண்டாயது. அதனால் இதுவே முனிவர் கூறிய திருத்தலமென்றுணர்ந்து அவ்வெல்லையை வணங்கி உட்புகுந்து வீதிவலம் வந்து கோபுரத்தை வணங்கி திருக்கோயிலுட் சென்று சிவலிங்கப்பெருமானையும் அம்மையையும் வணங்கிப் பூசித்துத்துதித்தன அம்முறையே வழிபாடு செய்துகொண்டு அளவில் காலம் அத்திருத்தலமமர்ந்தன.

இவற்றின் வழிபாடு நோக்கிச்சிவபெருமான் ஒருநாள் உமாசமேதராய் இடபாரூடராய்த் தோன்றியருளித்தருக்களை நோக்கி உங்கள் வழிபாட்டான் மிக மகிழ்ந்தனம் விருப்பம் யாது? உரைமின் என்று திருவாய் மலர்ந்தருளினர். இதுகேட்ட தருக்கள் கண்ணீரொழுக மனங்கசிந்துருகி எம்பெருமானே இத்தலத்தெல்லையடையப்பெற்றதும் எமது துக்கமுழுதுநீங்கிப்பூர்



வஞ்ஞானமு நிறையப்பெற்றோம். அம்மட்டோ சர்வலோக பிதா மாதாவாகிய தங்களை இந்த உத்தமோத்தம புண்ணிய க்ஷேத்திரத்திலே பூசிக்கவும் பெற்றோம். இதைக்காட்டிலும் இனிப்பெறுவன வுண்டோ? ஆயினும் ஆஞ்ஞை தந்தமையால் இத்தலம் எங்கள் பேரால் விளங்கவும் அடியேங்கள் இத்தலத்தினின்றும் நீங்காமல் வசிக்கவும் தந்தருளுக என்று பின்னும் வணங்கின. எம்பெருமான் தருக்களே, உங்கள் வேண்டுகோளின்படி இத்தலம் திருநெல்லிக்காவென்று விளங்குக. நீங்கள் இத்தலத்திலேயே வசித்தால் இந்திரனுக்கு முட்டுப்பாடுண்டாகுமாதலால் உங்கள் முக்காற்கூறு இத்தலத்திலும் காற்கூறு முன்போலச்சுவர்க்கத்திலுமாக வசிப்பீர்களாக என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினர். உடனே அத்தருக்கள் அவ்வாறே காற்கூற்றைச் சுவர்க்கத்துக்கனுப்பி முக்காற்கூறும் நெல்லிமரங்களாகவே இத்தலத்தில் என்றும் வசிக்கின்றன.

இவையிப்படி யிருக்க முன் பாற்கடல் கடைவித்த விஷ்ணுமூர்த்தி, காமதேனு கற்பகதரு முதலியன தோன்றின; பின்னும் நெடுங்காலம் அக்கடல் கடைந்தும் அமுதமுண்டாகாமையால் மனநொந்து சிவபெருமானை நோக்கி அமுதம்பெறும்பொருட்டுத் தவம் புரிந்தனன். சிவபெருமான் அவன் முன்றோன்றி இங்கு எத்தனை காலம் தவஞ்செய்யினும் பயனில்லை. சோணாட்டில் திருநெல்லிக்காவென்றொரு திவ்யஸ்தலம் இருக்கின்றது. அத்தலத்திற் போய் நம்மை வழிபடின் வேண்டுவன கைகூடும் என்றுரைத்து மறைந்தருளினர்.

அது கேட்ட திருமால் திருநெல்லிக்காவைச் சமீபித்து எல்லையை வணங்கி உட்சென்று ஐந்து தீர்த்த ஸ்நானம் செய்து நெல்லிவன நாதரையும் மங்களநாயகியையும் பூசித்து நெல்லிவன நிழலில் தவஞ்செய்துகொண்டு ஒரு வருடம் இருந்தனன். இருக்குநாளில் கார்த்திகைமீ துவாதசியில் நெல்லிவன நிழலில் அநேகம் சற்பிராமணர்களுக்கு அமுதினுமினிய அறுசுவைப போசனம் செய்வித்தனன். அவ்வருட முடிவில் ஓர் அசரீரி மாத

வனே, உனது வழிபாட்டாலுந் தவத்தாலும் மகிழ்ந்தனம். இனி நீ கவலைப்படேல். நமது நெல்லிக் காவில் சற்பிராமணர் பலருக்குச் சற்போசனம் செய்வித்தமையால் பாற்கடல்அமுதம் பெறுவாய் என்று கூறியது. இது கேட்ட திருமால் அரிதின் விடை பெற்று அமுதம் பெற்றுத் தேவர்க்களித்து மகிழ்ந்தனன்.

இந்நெல்லிவன நிழலிற் சற்பிராமண போசனம் செய்விப்பவர் அன்னதி எண் போகமும் பெற்று மறுமையில் அமரராய் அமுதவுணவும் பெற்று வாழ்வார்கள்.

**திருநெல்லிக்கா வானப் படலம் முற்றிற்று.**

## பதினோராவது திருநகரமான படலம்.

மேற்கூறிய நெல்லிமரங்கள் நாளடைவில் நெருங்கி வளர்ந்தன. மல்லிகை முல்லை முதலிய வாசனைமிகுந்த பூங்கொடிகள் இம்மரங்களில் இடைவெளியின்றிச் செறிந்து படர்ந்தன. இவ்வாறு மரம் செடி கொடி முதலியான நெருங்குதலால் மனுஷசஞ்சாரமற்றுப் புலி கரடி முதலிய மிருகங்கள் வசித்தன.

திருவாரூரிற் சங்கரசர்மன் என்றொரு பிராமணனிருந்தான். அவன் விபூதி ருத்திராக்ஷ பஞ்சாக்ஷர சிவசாதன வழிமையை யிறுகப்பற்றி, வன்மீகநாதரையும் வீதிவிடங்கப் பெருமானையும் தினந்தோறுந் தப்பாமற் சென்று தெரிசித்து வருவதே தொழிலாகக் கொண்டவன்.

இப்பிராமணன் நெடுநாள் அங்கு வசித்திருந்து பிறகு மற்றத்தலங்களையும் தெரிசிக்க நினைத்து ஸ்ரீ தியாகேசப் பெருமானிடத்தில் விடைகொண்டு, சிதம்பரம் காளத்திமுதலிய வடநாட்டுத் தலங்களைத் தெரிசித்து, மேலைநாட்டிற் சென்று ஆங்குள்ள



தலங்களையும் தெரிசித்து, பாண்டிநாட்டிலுள்ள மதுரை திருப்பெருந்துறை முதலிய தல தெரிசனஞ் செய்து வரும்போது, 'ஆரூரானை மறக்கலுமாமே', என்னும் சுருதிகடைப் பிடித்து மீண்டும் திருவாரூர் நோக்கி வருங்கழியில் திருவுசாத்தானம் திருக்களர் முதலியவற்றை வணங்கிக்கொண்டு, அத்தினம் பிரதோஷதினமாகையால், திருவாரூருக்கு விரைந்து செல்வானாயினன்.

சங்கரசர்மன் அதிக விரைவாய் நடந்து செல்வானாயினும், திருவாரூர் நெடுந்தூரத்திருந்தமையாலும் அவன் செய்த சிவதர்மத்தின் பயனாலும், திருநெல்லிக்காவில் வந்த அளவில் சூரியாஸ்தமனமாயிற்று. அங்குள்ள புலி கரடி முதலிய துஷ்ட மிருகங்கள் ஒன்றோடொன்று பிணங்கிப் போர் செய்தலின்றி யிணங்கி விளையாடின. இது போல மேலும் பற்பல அற்புதங்கள் விளங்கின. இந்த அத்தியற்புதங்கள் கண்ட சங்கர சர்மன் இந்தலம் அத்தியந்த உத்தமோத்தம சிவஸ்தலம் போலும் என்றெண்ணி உட்செல்லுங்கால் அவ்வனமத்தியிலே சிவலிங்கப் பெருமானையும் மங்கள நாயகியையும் கண்டுபெற்றுப் பேரானந்த முற்றுத்திருமுன்பு பன்முறைவணங்கித் துதித்துச் சிவத்தியானபரனாய் அங்கிருந்தனன்.

அன்று பிரதோஷமாகையால் திருமால் முதலிய தேவர்கள் முன்வழக்கம் போல ஆமலகேசனைப் பூசிப்பதற்கு வந்தார்கள். அப்பொழுது சங்கரசன்மனுக்குத் திருவருளால் அத்தேவர் செய்யும் பூசையைப்பார்க்குந் திறமை வந்தது.

வந்த தேவர்கள் ஐந்து தீர்த்தங்களிலுமாடித் திருநெல்லிவனநாதருக்கும் மங்களநாயகிக்கும் பூசை செய்யத்தொடங்கி அபிஷேக தூப தீப நைவேதன முதலியன செய்து துதித்து நின்றனர். பார்த்து நின்ற சங்கரசன்மன் தானும் நீராடிப் பூசித்தனன். அன்றிரவு முழுதும் நம்பெருமானை வழிபட்ட தேவர்கள் விடியற்காலத்திற் றம்முலகஞ் சார்ந்தனர். திடீரென்று அவர்கள் மறைந்ததை யுணர்ந்த சங்கரசன்மன் ஆச்சரியமடைந்து அம்மை அப்பரை வணங்கி விடைகொண்டு திருவாரூர் நோக்கிச் சென்றனன்.

அக்காலத்தில் ஆரூரை யாண்டுவந்த அரசன் அதிக நற்குணமுடையான். சிவபெருமானன் பரம்பொருளெனத் தெளிந்து நிஷ்களங்கபக்தி பூண்டு பூதிசாதன மேற்று நின்றவன். சிவனடியாரைச் சிவனெனப் பேணித்தன்னுயிர் போல மன்னுயிர் காக்கும் ஜீவகாருணிய முள்ளவன். பகையரசர்க்குச் சிங்கம் போன்றவன். வீதிவிடங்கப் பெருமானைத் தினந்தோறும் தெரிசித்தலை நியமமாகக் கொண்டவன்.

ஆரூரடைந்த சங்கரசன்மன், நெடுநாளாகப் பிரிந்திருந்த ஆயல் தீர வீதிவிடங்கப் பெருமானைத் தரிசித்துச் சோழகுலதிலகனாகிய அவ்வரசன் முன் சென்றனன். அவனது குலத்தையும் சிவவேடத்தையும் கண்ட அரசன் எழுந்து ஆசனங்கொடுத்து வணங்கி ஆசிபெற்று, அருக்கிய பாத்திய முதலிய உபசாரஞ் செய்து தேவரீர் இங்கு வரும்படி யடியேன் செய்த பாக்கியம் யாது என்றுரைத்திருந்தனன். சங்கரசன்மன் அரசனை நோக்கிச் சோளகுல சிகாமணியே! நான் சிலகாலமாய்ச் சிவஸ்தல யாத்திரை செய்து தக்ஷணம் போய் அங்குள்ள தலங்களைத் தெரிசித்து வீதிவிடங்கத்யாகேச தரிசன வாஞ்சையிருப்ப விரைந்து வந்தேன். வழியிலோர் நெல்லிவனங் கண்டேன். அதைவிட்டு நீங்குமுன் சூரியன் மேல்கட லடைந்தனன். மிருகங்கட்குப் பயந்தோர் கோயில் கண்டுட் புகுந்தேன். அக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற அம்மை யப்பர் திருமேனி அழகை என்சொல்வேன். அவரைத்தரிசித்து அங்கு இரவைக் கழிப்பதாய் இருந்தனன். அப்பொழுது அங்கோர் ஆச்சரியம் நிகழ்ந்தது. திருமால் முதலிய தேவகண முழுதும் அம்மை அப்பரைப்பூசித்து விடியுமுன் விண்ணுல கடைந்தனர். சிவபக்த சிரோன்மணியாகிய தாங்கள் வந்து தரிசிக்க வேண்டுமென்பது என் அவா என்றனன்.

அது கேட்ட அரசன் மந்திரிமாருக்குந் தெரிவித்து நால்வகைச் சயினியமுஞ் சூழச் சங்கரசன்மனுடன் நெல்லிவன நோக்கி மிகவிரைந்து வந்து, எல்லையை நோக்கி வணங்கியுட்



புகுந்து, வீதிவலம்வந்து கோயிலுட் சென்று, ஆமலகேசனையும் மங்கள நாயகியையும் தெரிசித்து வணங்கி மனமுருகித் துதித்து எம்பெருமானே, ஆமலகேசா, நீ யிந்தக் காட்டிற் கோயில் கொண்ட ஆச்சரிய மென்னை! அடியவர்களது கூத்தொலி ஏத்தொலி முதலிய இன்னிசை கேட்டின்புறுகின்ற நின்றிருச் செவிகள் கொடிய மிருகங்களின் குரல் முழக்கொலியையும் கேட்டனவோ. கங்கை முதலிய தீர்த்தங்களால் அபிஷேகிக்கப்பெறும் அருமைத் திருமேனி மழையும் வெய்யிலும் ஏற்றதோ? திருமேனி மீது மழை வெயில் படாவண்ணந் தமது கிளைகளால் இலை மலராகிய சித்திரப்படாத்தை, இடைவெளியின்றி மேற்பிடித்திருக்கும் ஓரறிவுள்ள இம்மரங்களினும் மனிதராகிய யாம் என்ன சிறப்புடையேம்? நீ எழுந்தருளியிருக்கிற இவ்விடத்திற் றிருக்கோயிலும் திருநகரமும் செய்வித்துப் பார்த்தாலொழிய என் மனக்குறை தீராது. நீவாளா வனவாசஞ் செய்ய அஃதறியாதடியேன் பாலு நெய்யுமுண்டு அரண்மனையில் வசித்துப் பெரும்பாதகன் ஆயினேனே என்றிவ்வாறு அன்புமொழி கூறிப்பன்முறை வணங்கிப் புறத்தேவந்து மந்திரியை நோக்கித் திருக்கோயிலுந் திருநகரமுஞ் செய்க வென்றாஞ்ஞாபித்தனன்.

அரசனது ஆஞ்ஞை சிரமேற்கொண்ட மந்திரி உடனே வேலையாட்களைத் தருவித்துக் காடுவெட்டுவித்துச் சிற்பநூல் வல்லவரைக்கொண்டு அந்தணர் முதலிய நான்கு வருணத்தார்க்கும் ஏனையோர்க்கும் முறையே வீதிகளும் அவ்வீதிகளின் இருபுறத்திலும் அலங்காரமான வீடுகளும், திருக்கோயிலுக்கு வடதிசையணிமையில் ஆதிசைவர் வீதியும் அதில் அதிவிசித்திர மாளிகைகளும் மத்தியிலே நடுநாயகமாகச் சிவாகம விதிப்படி திருக்கோயிலும் அதி விரைவிற் செய்வித்து வந்து அரசனை வணங்கித் திருப்பதிமுழுதும் முடிந்தமை தெரிவித்தான். உடனே சோழ குலதிலகனாகிய அவ்வரசன் சோதிடம் வல்லாரால் சுபதினம் நிச்சயித்து அதிவிஸ்தாரவைபவத்துடன் நெல்லிவனநாதர்க்கும் மங்களாம்பிகைக்கும் கும்பாபிஷேகம்

செய்வித்தான். அதே லெக்கினத்தில் ஆதிசைவரையும் ஏனையோரையும் குடிபுகச் செய்து, நெல்லிவன நாதர் சந்நிதியின் வடபாற்புறக் கொணச்செய்த அரண்மனையில் தானும் குடிபுகுந்திருந்து, நெல்லிவன நாதர்க்கு அநேக கிராமங்கள் சர்வமானியம் செய்து திருக்கோயில் நித்திய நைமித்திகங்கள் வழுவாமல் நடைபெறச்செய்து இத்தலம் பட்டணமாக வசித்தனன். ஆமலகவனத்தைத் திருநகரமாக்கின மையின் அவ்வரசனை ஆமலகேச சோழன் என்று பெரியோர் சொன்னார்கள்.

ஆமலகேச சோழன் பத்தினி சகிதமாய் ஆமலகவனத்தில் ஆமலகேசரையும் மங்களநாயகியையும் வழிபாடு செய்துகொண்டு நெடுங்காலம் வாழ்ந்து கொண்டிருந்தான். திருவருளால் கெர்ப்பவதியாகிச் சீமந்தாதி கிரியா விசேடங்கள் முழுதுஞ் செய்யப்பெற்றுப் பத்து மாசமுஞ் சென்று சர்வலக்ஷண விசிஷ்டகுணங்களெல்லாம் நிறைந்த அருமணி போன்ற ஓர் ஆண்புத்திரனைப் பெற்றாள். அச்சிசுமணிக்கு அரசன் உத்தம சோழன் என்னும் நாமகரணாதி சடங்குகள் செய்தான். அவ்வுத்தமப் புதல்வன் மூன்றாம் பிறைபோல வளர்ந்து வருங்கால் ஐந்தாம் வயதில் வித்தியாரம்பம் செய்து தென்மொழி வடமொழியிரண்டிலும் சிறந்தோனாக வில்வித்தை வாள்வித்தை யானையேற்றம் குதிரையேற்றம் முதலிய தன் சாதிவித்தைகளிலும் நிறையப் பயிற்றுவித்தான். அப்புத்திரன் சகலவித்தைகளுங் குறைவறப் பயின்று அதிமேதாவியாய் விளங்கினன். அது கண்டு மகிழ்கின்ற அரசன் அவனுக்குத் தகுந்த வயது வந்ததும் தான் அடைந்த பூபாரத்தை அவன் தோளிலிறக்கி அவனுக்கு முடிசூட்டி அதிவிரக்தனாய் வசித்திருந்து திருமால் முதலிய தேவர்க்கு மெட்டாத திருவடித்தாமரையை யடைந்தனன்.

திருநகரமான படலம் முற்றிற்று.



## பனிரண்டாவது மங்களாம்பிகை திருவவதாரப் படலம்

உத்தம சோழ மகாராஜன் சந்திரவம்சத்திற் பிறந்த பதுமமாலையென்னும் பெண்மணியை மணந்து செங்கோல் செலுத்தி வந்தான். அவனது அரசாட்சியின் பெருமை யாவராலும் உள்ளவாறு சொல்லமுடியாது. தன்னுயிர்போல மன்னுயிர் காத்து மந்திரி பிரதானிகளின் புத்தியை மேற்கொண்டு, உரிய நான்முறை யோதிய செங்கோல் செல, உள்ளோராயினு மில்லோராயினும், நீதிநெறியுங் கோடாது புரிந்து, பாரியையாக நேரியளாய, பதுமமாலையென்னும் பதுமமாதனையாள், தன்னை யொழிந்த மின்னிடை நல்லார்க்கு, குடன் பிறந்தோனிற்றிடம் பெறநடாத்தி, வடமொழிக்கடலும் தென்மொழிக்கடலும், அடைவினுணர்ந்தோருடனளவளாவியே, பொழுது போக்கிப் பழுதிலாமலக வனநாதனையவன் வாமமாயமையைத், தினமும் வணங்கிக் கனவிலும் பாறாது, நித்தியாதி முத்திறப்பூசனை, நாளுகாலங்க நடாத்தி வந்தனன்.

இவ்வாறு இல்லற தர்மத்திலும் அரசதர்மத்திலும் தவறாது அரசபுரிந்து நெடுநாட் சென்றும் மகப்பேறின்றிச் சிறிது கவலையுற்றுப் பெரியோருரைப்படி மகப்பேறு குறித்துச் சோமவாரசுக்கிரவார முதலிய விரதங்களும், கன்னிகாதான பூதான கோதானாதிதானங்களும், அசுவமேத முதலிய யாகங்களும் ஏனைத் தருமங்களும் நடத்தினான். இதன்மேலும் மகப்பேறு கிடைத்திலது.

இவ்வாறிருக்கையில் ஓர் நாள் மாலைக்காலத்தில் உத்தம சோழ மகாராஜனும் பதுமமாலையும் தினம்போல மாலைக்கடன் முடித்து, விபூதிருத்திராக்ஷ தாரிகளாய்த் திருக்கோயிலுட் புகுந்து, தீபாராதனை தெரிசனஞ் செய்து, சகஸ்திர நாமார்ச்சனை செய்வித்துப் பணிந்து துதித்துக் கொண்டிருந்து பின

மங்கள நாயகியை நோக்கி உலகமாதாவே! உன் திருவருள் என்று வாய்க்குமோ வென்றெதிர் பார்த்திருக்கிறோம். முன் தாக்ஷாயணியாகிய குறைதீர மலையரசனுக்கு மகளாக வந்தருளினை. அவன் புரிந்த அருந்தவப் பெருமை யார் சொல்லவல்லார். உன்னைக் குழந்தையாக வளர்த்து வரும் பெரும்பேறு எம்மனோர்க்கெளிதோ என்றெண்ணி மூன்று வயதுள்ள பாலையாகத் தியானித்தார்கள். அவர்கள் கருத்தின்படியே மூன்று வயசுப் பெண்மணியாக வந்து அரசன்மடியில் வீற்றிருந்தருளினள். இதுகண்ட அரசனும் தேவியும் மிகவுவந்து நெக்கு நெக்குருகி ஆனந்த பரவசராய் மெய்ம்மயிர் பொடிப்பக் கண்களீர் வார சர்வலோக மாதாவாகிய அக்குழந்தையை எடுத்தணைத்துச்சி மோந்து முத்தமிட்டு மார்புறத் தழுவிப் பேரானந்தப் பெருங் கடலின் மூழ்கினார்கள். தேவதுந்துபி முழங்கின. பூமழை பெய்தது. இவ்வற்புதத்தைப் பார்த்துத் தேவரும மானுடரும் அரகரவென்று துதித்தார்கள். அப்பொழுது திருவருளாலோரசரீரி உத்தமசோழனே, உனதன்பிற் கிரங்கி யிம்மகவைத் தந்தோம். பெண்மகவென்று நினையாதே. ஆண்மகவைப் போலவே சாதகன்மமும் மங்களநாயகி யென்று நாமகரணமும் மற்றும் சடங்குகளும் செய்து உன்மரபுக்குரிய வில் வாள் முதலியனவும் பயிற்றுவித்து வருக. உரியவயதில் நாமேவந்து இப்பெண் மணியைத்திருமணம் செய்கின்றோம் என்று கூறியது.

அது கேட்ட அரசனும் மனைவியும் அளவிலானந்த அருட் கடலின்மூழ்கி அன்பு வளர்த்தோங்க சிவலிங்கப் பெருமானுக்கும் அம்மையார்க்கும் பெருஞ் சிறப்புச்செய்து பன்முறை வணங்கிக் கண்மணியினுஞ் சிறந்த அப்பெண்மணியைக் கைம் மணியாகக் கொண்டு தமது அரண்மனைக்குச் சென்றார்கள். பின்பு அரசன் புத்திரப் பேற்றால் தன் முன்னோர்கள் அவ்வக்காலங் களிற் செய்துவந்த சிறப்புகளைப்பார்க்கிலும் நூறுமடங்கு அதிகமாகச்செய்தான். சிறைச்சாலையிலிருந்த அயலரசர்களை அச் சிறையினீக்கிப் பொருள்பல கொடுத்து மகிழ்வித்தான். மற்றுந் தன்னாட்டிலுள்ள குடிகள் தரும் இறைப் பொருளும் ஏனை அர



சர் தருந்திறைப் பொருளும் ஏழாண்டுவரையிலும் தரவேண்டாமென்றாஞ்ஞாபித்தான். அந்தணர்க்கு அநேக கிராமங்கள் சர்வ மானியமாகக் கொடுத்தான். இன்னும் எல்லையிலாத தான தருமங்கள் செய்தான். அந்நகரத்திலும் நாட்டிலுமுள்ள சர்வ ஜனங்களும் திருவிழாக் கொண்டாடினார்கள்.

உத்தம சோழமகாராஜனும் பதுமமாலையும் செவிலித்தாய் முதலிய தாய்மாரும் தோழிமாரும் அத்தலத்துள்ளாரும் ஏனையோரும் மனம் மிக மகிழும்படி உலக மாதாவாகிய மங்கள நாயகி சிற்றிலிழைத்தல் முதலிய விளையாடல் பற்பல புரிந்தனள். சர்வலோக மாதாவையே மகளாகப் பெற்ற அரசனும் அரசியும் பேரின்பக்கடலில் மூழ்கினார்கள்.

விளையாடற் பருவம் முடிந்த அளவிலே அம்மை குருமுகமாகக் கொள்வதே முறை யென்றுணரும் கருத்தினளாய் வட மொழி தென் மொழி இசைநூல் முதலிய நூலுணர்ச்சியும், வில்வித்தை வாள்வித்தை யானை யேற்றம் குதிரை யேற்றம் முதலியனவும் பயிலத் தொடங்கினாள். தொடங்குமுன் அவை முழுதும் தாமே வந்து நிரம்பின.

தன் மகளாகிய மங்களநாயகியின் திருவுருவத்தையும் கல்வித் திறமையையும் உணர்ந்த உத்தமசோழ மகாராஜா அளவிலானந்த மடைந்து திருவருளை நினைந்து நினைந்துருகி அம்மைக்குத் தகுந்த வயதும் தனக்கு முதுமையும் வந்ததையுணர்ந்து அமைச்சரை யழைத்து மகட்கு முடி சூட்டிச் செங்கோல் செலுத்துவதையும் கண்டு களிக்கவேண்டுமென்ற விருப்பத்தை வெளியிட்டனன். அவரும் கங்கை யமுனை கோதாவரி முதலிய புண்ணிய தீர்த்தங்களைத் தருவித்துச், சகல வைபவங்களும் நிகழ, ஐம்பத்தைந்து தேசத்தரசரும்வந்து வணங்கச் சுபமுகூர்த்தத்திலே மகுடாபிஷேகஞ் செய்வித்தனர். உலகமெல்லாம் ஈன்ற தன்னை மகளாகப் பெற்ற அவ்வரசன் மனங்குளிர மங்களநாயகி தேசமெல்லாம் செங்கோல் செலுத்தி அரசியற்றி வருகின்றாள். இப்படியே நெடுங்காலம் செல்ல அத்தியற்புத அதி மகத்துவ

அரசியற் பெருமை முழுதுங் கண்டு வந்த உத்தம சோழ மகாராஜன் நெல்லிவன நாதர் திருவருளால் நித்திய பரிபூரணானந்த மயமாகிய திருவடி நீழலடைந்தனன். தன்னை மகளாக வளர்த்த பதுமமாலை துயர் நீக்கி அரசனுக்கு அபரக்கடனியாவையும் செய்தனன்.

மங்களாம்பிகை திருவவதாரப் படலம் முற்றிற்று.

---

## பதின்மூன்றாவது மங்களாம்பிகை திருமணப் படலம்.

---

உலகமெல்லாவற்றையும் படைத்துக் காத்தழித்து மறைத்து அநுக்கிரகிப்பதற்குச் சிவபெருமானுக்குத் துணையாயிருக்கும் சிவசக்தியாகிய மங்களாம்பிகை ஆன்ம கோடிகள் இன்புற அரசு புரிந்து காத்தளித்தன ளென்பது ஒரு வியப்போ? மந்திரிமாரும் அருங்கலையுணர்ந்த பெரியோரும், இவை செயத்தகாதன, இவை செயின் இந்த நன்மை விளையும், இவை செயின் இத்தீமை விளையாது என்று ஆலோசனை கூற, எங்கும் நிறைந்து யாவையும் உணர்ந்த அம்மை, அவ்வுத்தியைக் கேட்பாள் போன்று அப்படியே நடத்தி வருவாளாயினள்.

ஒவ்வொரு தினமும் சில நேரம் தாயாகிய பதுமமாலையுடனும், சிலநேரம் வியாகரணாதி சாஸ்திரம் வல்லாருடனும் சிலநேரம் இருக்காதி வேதம் வல்லாருடனும் சிலநேரம் மனுவாதி நூல்வல்லாருடனும் சிலநேரம் அமைச்சருடனும் பலநேரம் காமிகாதி ஆகமம் வல்லாருடனும் பலநேரம் வடமொழி தென்றமிழ் வல்லபுலவருடனும் பொழுது கழிப்பாள். தன்னாட்டுக் குடிகளாயினும் மற்றையோராயினும் தத்தம் குறை கூறவருவாராயின் அவர்களுக்குக் காட்சிக்கினியளாய்ப் புன்முறுவல் பூத்த திருமுகத்துடன் இனியன கூறி அவர்குறையை அன்றே நீக்கு



வாள். இருநாழி நெற்கொண்டு முப்பத்திரண்டறமும் வளர்த்த அம்மை உலகத்தரசர்க்கு உலகமாள்வ திவ்வாறெனத் தெரிவிப்பாளாய் மனுநெறிப் படி அரசியற்றி வருதலால் மாதம் மும்மாரி பெய்ய வளஞ்சுரந்து சிறுமை நீங்கியுலகு செழித்தது.

இவ்வாறு சிலகாலம் நீங்க அம்மைக்குத் திருமணப் பருவம் சமீபித்தது. தனதரும் பெறன்மகளுக்குத்தக்க வரன் இவ்வுலகத்தின் கணில்லையே யென்று பதுமமாலை சிறிது வருந்தினள். இதை உணர்ந்த அம்மை வீதி விடங்கப் பெருமானைத் தரிசிக்கத் திருவாரூர் செல்கின்றனம் - என்றாஞ்ஞாபித்தனள். அமைச்சர் முதலியோர் உரியவரிசையோடெழுந்தனர்.

மங்களநாயகி ரதாரோகணியாய்ச் சென்று ஆரூரடைந்து கலாதீர்த்தத்திற் சங்கற்பமோதி ஸ்நானம்செய்து திருநீறணிந்து நித்திய கன்மமுடித்துக் கோயிலுட் புகுந்து கமலாம்பிகையை வணங்கி வன்மீக நாதரைப் பணிந்து, வீதிவிடங்கப் பெருமான் சந்நிதியிற் சென்று, பூஜோபகரணங்கள் கொண்டு, அபிடேக நைவேத்திய சோடசோபசாரங்களுடன் விதிப்படி பூசித்து சந்நிதியில் எம்பெருமானைத் தியானித்து நின்றனள், 'அங்கமெலாங் குறைந்தழுகுதொரு நோயராய் ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்,' தமக்கன் பராயின் அவருக் கெளிதிற்றிருவருள் செய்யும் பெருமான் பூவின் மணம்போலத் தம்மைப் பிரியாத சிவசத்திக்கு நேர்வருவதரிதோ? மங்களநாயகி,' ஆவணித்திங்கள் முதற்சுக்கிரவாரம் உன்னைத் திருமணஞ்செய்யத் திருநெல்லிக்கா வருகின்றோம் - என்று திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட அம்மை தலைகுனிந்தொதுங்கி நின்றனள். இன்னியம் முழங்கின. அமைச்சர் முதலியோர் அரகரவென்றாரவாரித்தனர் தேவர் பூமழை பொழிந்தனர். எல்லாரும் குதூகலித்தனர். அம்மை வணங்கியெழுந்து விடைகொண்டு தனதிராஜதானியாகிய ஆமலக வனத்தை யடைந்தனள்

அடைந்த அம்மை திருவாரூரில் நடந்த விஷயங்களைத் தாயிடம் தெரிவித்தனள். அவளும் மந்திரிமாரை யழைத்து மங்களரசியின் திருமணம் சமீபித்தது. இத்திருநகரத்தை அல

ங்கரியுங்கள். அரசர்க்கெல்லாம் திருமணப்பத்திரம் அனுப்புங்கள். நமது ராஜாங்கத்திற்குத் தக்கபடி இத்திருக்கல்யாண மகோற்சவத்திற்கு வேண்டுவனவெல்லாம் செய்யுங்கள் என்று ஆஞ்ஞாபித்தனன். மந்திரிமார்கள் ஐம்பத்தைந்து தேசத்தரசர்க்கும் ஏனையோர்க்கும் திருமணத்திருமுகம் உரிய முறையிடுத்துப்பின் ஏவலாளரைக்கொண்டு - நமதரசியாகிய மங்களநாயகி திருக்கல்யாணம் சமீபித்தது. ஆதலால் இத்திரு நகரவாசிகளெல்லாரும் வீடுகளெங்கும் வீதிகளெங்கும் அலங்காரம் செய்யுங்கள் - என்று யானைமீது முரசறைவித்தார்கள். அதுகேட்ட அந்நகரவாசிகள் அப்படியே அதிவிசித்திர அலங்கார வகையெல்லாம் செய்தார்கள்.

அரண்மனையையும் ஆமலகேசர் திருக்கோயிலையும அதிவிசித்திர மனோகரமாய் அலங்காரமுழுதும் செய்தார்கள். அவ்வரண்மனையிலே மாணிக்க மரகத வச்சிர வயிடூரியாதி திவ்யரத்ன வகைகளால் தூண் உத்திரம் போதிகையாதிகளமைத்து அதிவிஸ்தாரமாகிய திருக்கல்யாணமண்டபமொன்று செய்து மரகதமாதிரெத்தினங்களால் வாழை கமுகு கரும்பு முதலியன இடமிடங்கடோறு நிரைத்துப்புஷ்பரத்தினாதி பல்வகை மாலை தூக்கி, இது போல் எவ்வுலகத்திலும் இல்லை என்பதாக அத்தியற்புத அதிமகத்துவ அதிவிசித்திர விஸ்தார விசேஷவைபவ நாநாவித திவ்யாலங்கார வகைகளெல்லாம் செய்து எவ்வெத்தேசத்து அரிய பொருள்களும் மிக எளியனவாக எல்லையின்றி வரவர வேண்டுமிடங்கடோறும் நிறைத்தார்கள். அத்திருநகரவாசிகள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சொந்தக் கல்யாணவிசேஷங்களைக்காட்டிலும் அன்பும் ஆச்சரியமும் ஆநந்தமும்கொண்டு பந்து மித்திரர்க்கெல்லாம் திருமணத்திருமுகம் அனுப்பி தத்தம் வீடுகடோறும் வேண்டிய பொருள்களெல்லாம் நிறைத்து திருக்கலியாணத்துக்குரிய விசேஷ பொருள்களெல்லாம் அதிப்பிரயாஸத்துடன் செய்வாராயினர். அவ்வத்தேயத்தரசரும் மற்றையோரும் திருமணத்திருமுகம் வர எதிர்கொண்டு பூசித்து வாங்கிச் சிரமேற்கொண்டு அளவிலானந்த முடையராய் நால்வகைச் சயினியங்க



ளும் அரும்பொருள்களும் சூழத்திருமண மகிழ்ச்சிமிக வருகின்றார்கள்.

இஃதிவ்வாறாக வீதிவிடங்கத்தியாகராசப்பெருமான் தேவகுருவாகிய வியாழபகவானையழைத்து - வரும் ஆவணி மாதம் முதற்சுக்கிரவாரம் திருநெல்லிக்காவில் உத்தமசோழன் குமரியாய் அவதரித்திருக்கிற நமது சத்தியைத் திருமணம புணரப் போகின்றோம். முப்பத்து முக்கோடி தேவரையும் நாற்பத்தெண்ணாயிரம் முனிவரையும் பிரமன் றிருமால் முதலியோரையும் அழைப்பாயாக—என்றாஞ்ஞாபித்தனர். அப்பணி சிரமேற்கொண்ட வியாழன் திருமால் முதலிய தேவரையும் முனிவரையும் அழைத்தனன். அவரெல்லாம் மனமகிழ்ந்து அழகிய செல்வத்திருவாரூரையடைந்து கோயிலுட்புகுந்து திருமுன் சென்று வணங்கி நின்றனர். அவ்வவர் தரத்திற்குத்தக்கபடி திருவருள்புரிந்து கொலு வீற்றிருந்தருளுகின்ற எம்பெருமானுக்குத் தோழனென்னும் பெரும்பேறுபெற்ற குபேரன் மணவாளக்கோலம் செய்வானாயினான்.

திருச்சிரத்திலே சடாமகுடத்தை மறைத்து அநேக கோடி சூரியர் ஒருங்குதித்தாற்போன்ற சுவர்ண ரத்நகிரீடம் சூட்டி திருச்செவியிலே திவ்யரத்நகுண்டலமணிந்து திருத்தோளிலே வாகுவலயாதிகள் புனைந்து திருமார்பிலே கண்டிகை முத்துமாலை முதலியனசாத்தித் திருவரையிலே பீதாம்பரமும் அதன்மேல் உதரபந்தனமுஞ்சேர்த்து உத்தரிய கங்கண நூபுராதிகள் அணிந்து திருவடிகளில் வணங்கி நின்றனன். இவ்வாறு திருமணக்கோலங்கொண்ட தியாகராஜப்பெருமான் றிருவிருப்பின் எழுந்தருளிப்பிரமவிஷ்ணுக்களிருபக்கத்துந் திருக்கரந்தாங்கி வரப் புறத்துவந்து இடபாரூடராய்த் திருநெல்லிக்காவைநோக்கிச் சென்றருள்வாராயினர். தேவர் முனிவர் முதலியயாவரும் தத்தம் வாகநாதிகள்மேற்கொண்டு சென்றனர். சங்கு கர்ண வாணகுண்டோதராதி சிவகணங்கள், சங்கம் எக்காளம் மிருதங்காதி வாத்தியங்கள் முழக்கிக்குடைசுருட்டி ஆலவட்டம் சாமரை முதலிய பணிபுரிந்து சென்றனர். முனிபத்னிகளும் அரம்பை

யர்களும் தேவாஷ்டமங்கலாதி சகல வரிசைகளும் ஏந்திச்சென்றனர். சற்பிராமணர்போர் வேதாதி திவ்யகோஷம்செய்து கொண்டு சென்றனர். விபூதிருத்ராக்ஷபஞ்சாக்ஷர சிவசாதன நெறித்திருத்தொண்டர்கள் திருநெறித் தமிழ்மறை பாராயணம் செய்து சென்றனர்.

இவ்வாறு எம்பெருமான் திருநெல்விக்காவுக்கருச சமீபத்தில் எழுந்தருளிவருவது தெரிந்த மந்திரிகள் வைதீகமறையோர் வேத கோஷத்துடன் அறுகெடுத்துப் பொரிசிதறிவரச் சுமங்கலிகள் ராஜாஷ்டமங்கலம் ஏந்திவர ஏனையோர் ஏனைய ராஜவரிசைகள் தாங்கிவர நால்வகைச்சயினியங்கள் சூழ்ந்துவர எம்பெருமானை யெதிர்கொண்டழைக்க வந்து திவ்யமணக்கோலம் தெரிசிக்கப்பெற்றுப் பேரின்பமுற்றுப் பன்முறை வணங்கித் துதித்து உடன்வர எம்பெருமான் திருநகருட்சென்று திருவீதி வலமாகவந்து அரண்மனைவாயிலில் வந்தருளி இடபவாகனத்தினின்றும் குண்டோதரர் தோளிற்றிருப்பாதம் வைத்திறங்கியருளி இருபக்கத்திலும் பிரம விஷ்ணுக்கள் கரம்பற்றித் திருக்கல்யாண மண்டபத்திற்குச் சென்றருளினர். உடனே பதுமமாலை பொற்கலசந்தாங்கி நீர்வார்ப்பத் திருமால் தியாகேசப்பெருமான் திருப்பாதங்களில் அபிஷேகித்து சந்தன புஷ்பாதி அணிந்து பூசித்து வணங்கிப் பாததீர்த்தத்தைச்சிரமேற்றெளித்து ஆசமித்து நின்றனன். பதுமமாலையும் வணங்கி ஆசமித்துத் தெளித்துக்கொண்டு பிறர்க்கும் கொடுத்தனள். எம்பெருமான் உட்சென்று திவ்ய ரத்நசிங்காசனத்தில் வீற்றிருந்தருளி, விஷ்ணுவாதி தேவர் முனிவர் யாவரையும் அவரவர்க்கிட்ட ஆசனத்தில் இருக்கும்படி ஆஞ்ஞாபித்தருள ஆஞ்ஞை சிரமேற்கொண்டு ஆசனங்கிருந்தனர்.

பின்பு அலங்கரிக்க நல்ல தோழிமார்கள் லோகமாதாவாகிய மங்களநாயகியை எண்டிசையும் கமழும் சுகந்த தைலம் பூசித் திவ்யவாசனைபூட்டிய கங்கை முதலிய தீர்த்தங்களால் அபிஷேகித்து உயர்ந்த ரத்நங்களை இடைஇடையேவைத்து விலைமதிப்பிலாத மாற்றுயர்ந்த பொன்னூல்களால் செய்த பீதாம்பரம் புனைந்து சிரசுமுதற்பாதம் வரையில் திவ்யரத்நாபரணாலங்கார வகைகளெல்லாம் அதிவிசித்ரமாகச்செய்து தங்கள் கைச்சாதுரிய முழுமையும் காட்டினர். பின்பு சுபமுகூர்த்த சமயம் இலக்குமி சரஸ்வதியிருவரும் வந்து வணங்கி இருபக்கத்துங்கைசேர்ந்து நின்றழைப்ப எம்பெருமாட்டி எழுந்தருளி அவ்விருவர்கைப் பற்றிக்கொண்டு இந்திராணி முதலிய தேவஸ்த்ரீகளும் தோழியர்களும் பற்பல வரிசைகளேந்திச் சூழ்ந்து வரச்சென்றருளி எம்பெருமான் பக்கத்து வந்து வீற்றிருந்தருளினர்.



உடனே பிரமதேவன் திருமணத்துக்குரிய கிரியைகளெல்லாம் விதிப்படி ஆரம்பித்து அக்கினிகாரியாதி செய்து வர மகாவிஷ்ணு மூர்த்தி எம்பெருமான் திருக்கரத்தில் எம்பெருமாட்டி திருக்கரத்தை வைத்து மந்திரோதகத்துடன் தத்தம் செய்தனர். மங்களவாத்தியங்கள் தேவதுந்துபியோடு முழங்கின. மாதர்குழாம் சோபனம் பாடினர். மறையவர் வேதமிசைத்தனர். அக்கினி வலஞ்சுழித்தோங்கினன். எம்பிரான் மங்களநாயகி திருக்கழுத்தில் என்றும் நீங்காத்திருமங்கலியதாரணஞ் செய்தருளினர். பூமாரி பொழிந்தனர். சகல மங்களங்களும் முழங்கின. வாழ்த்தோசை மலிந்தன. பின்னர் அம்மை திருவடியை ஐயர் திருக்கரத்தால் பொன்னம்மி வைத்தல் பொரியிடுதல் முதலிய சடங்குகளெல்லாம் செய்தருளினர்.

திருமணம் முடிந்து அம்மையோடும் வீற்றிருந்தருளிய சிவ பெருமானை திருவடியிற்றிருமால் முதலிய யாவரும் வணங்கித்துதித்தனர். ஒப்புயர்வில்லாத அம்மையையும் அப்பனையும் திருமணக்கோலத்தோடு தெரிசிக்கப் பெற்றோமென்று பெருமகிழ்வடைந்தனர்.

சிவபெருமான் திருமால் முதலிய தேவர் முனிவர்க்கும் பாண்டியன் சேரன் முதலிய அரசர்க்கும் அவரவர்க்குரிய சிறப்புகள் செய்து வீற்றிருந்தருளினர்.

மங்களாம்பிகை திருமணப்படலம் முற்றிற்று.

## பதினான்காவது அமிர்தானந்த பஞ்சாக்ஷர லிங்க தரிசனப்படலம்.

---

திவ்ய ரத்ன சிங்காதனத்திலே தியாகேசப் பெருமானுடன் வீற்றிருந்த மலைமகளாயவள் ஏவலாளரை நோக்கி - நமது திருமணத்துக்கு வந்தோரனைவரையும் போஜனத்துக்கு அழையுங்களென்று திருவாய் மலர்ந்தருளி மடைப்பள்ளியுட்புகுந்து வெள்ளிமலைபோலன்னமும் பொன்மலை போற்பருப்பும் மரகதமலை போற்கறிவருக்கங்களும் பாற்கடல் முதலிய எழுகடல்களைப் போற்பாயசங்குழம்பு முதலியவும் சிற்றுண்டிவகைகளும் நிரம்பப் பிரைத்தல் கண்டுமேடைத்தொழில் பாலரைக்கொண்டு யாவரையும் போசனஞ்செய்வித்துப் பசியாறுங்களென்றருளினாள், அப்பணிசிரமேற்கொண்டு அவ்வாறு செய்வாராயினர்.

ஏவலாளரால் அழைக்கப்பட்ட தேவர் முனிவர் அரசர் முதலிய யாவரும் போஜனமண்டபத்திற்சென்று தத்தமக்கிட்ட ஆசனங்களிலிருந்து இன்னடிசிலுண்டாராயினர். அப்படி உண்ணும்பொழுது தேவேந்திரன் முதலிய தேவர் - மலைச்செல்வி எவிப்பித்ததுபோலத் திருமால் ஒரு பிரயத்தனத்தால் கடல் கடைந்தும் மிகச்சாமான்யமான அமுதளித்தனர். இவ்வளவிலேதுவாக இந்த அரிசைவயின்னமுது இங்கிருந்தால் அந்தச்சிரமம் வேண்டாமே அவ்வளவு சிரமப்பட்டும் இவ்வளவு இனிமையான உணவு கிடைத்திலதே - என்று மகிழ்ந்தனர். அரசர் முதலியோர் எப்பொழுதுங்கிடைக்காத இன்னடிசில் கிடைத்ததே என்று குதூகலித்தனர். இவர் செய்கை இவ்வாறாயின ககனத்தில் இல்லையும் கிழக்கும் அருந்தும் முனிவர் செய்கையைக் கூறவும் வேண்டுமோ.

தேவர் முனிவர் மனிதர் யாவரும் இவ்வாறின்னமுதருந்தத் திருவாரூர்முனிவர் கோயிலுட்சென்று அமலேசனையும் அம்பிகையையும் தரிசனஞ்செய்து, ஆனந்தபரவசராய் மனத்தில் என்றுமோராதோர் மெய்ப்பாடு தோன்றத் திருமணக்கோலங்கொண்ட தியாகேசர் திருமுன்சென்று வணங்கியெழுந்து



கைகூப்பிவாய்புதைத்துநின்றனர். அதுகண்டு பெருமான் - முனிவரர்சிரோமணீ; யாவரும் விருந்துண்ண நீயிங்குவந்து நிற்குங்காரணமென்னை? என்றருள, முனிசிரேட்டர் - தேவாதிதேவ திருமணமுடிந்ததும் இத்தலத்திற் கோயில் கொண்டருளியிருக்கிற சிவலிங்கப்பெருமானைத் தரிசித்தேன். என்னை யறியாமலோர் பேரானந்தம் ஜனித்தது. அதன் காரணந்தெரியவிரும்பினேன் - என்று வணங்கினார். வணங்கிய இருடியைப்பார்த்து முனிசிரேட்ட இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம் ஆனந்த பஞ்சாக்ஷர லிங்கம். அதன் யந்திரம் இருபத்தைந்து கோணம். வேதத்திற்கூறிய மகாமந்திரம் அநேகத்துள்ளும் பஞ்சாக்ஷரம் விசேடம். அப்பஞ்சாக்ஷரத்துள்ளும் அநேக பேதம் உண்டு. அவற்றுள் ஆனந்த பஞ்சாக்ஷரம் அதிவிசேடம். அந்த ஆனந்த பஞ்சாக்ஷர ஸ்வரூபமே இவ்விலிங்கம். அதன் யந்திரமே இவ்விலிங்கத்தின் இயந்திரம். ஆதலால் இந்த லிங்கத்திற்கு ஆனந்த பஞ்சாக்ஷரலிங்கம் என்றுபெயர். நீ தவம் புரிகையில் எந்த மந்திரத்தை ஜபித்து அந்த பலத்தினை உனக்குக் கிட்டவைகூடுமென்றோ அதுவே பகிர்முகத்தில் இவ்விலிங்கஸ்வரூபமாய் எழுந்தருளியிருக்கிறது. நீ உண்மைத்தவங் கைக்கொண்டவனானபடியால் இம்மூர்த்தியைக்கண்டதும் உனக்கு மெய்ப்பாடு நிகழ்ந்தது என்றனர். இதைக்கேட்ட முனிவரன் பின்னரும் வணங்கி - எந்தாய்; தாங்கள் திருவாய் மலர்ந்தருளியபடி இந்தச்சிவலிங்கப்பெருமான் ஆனந்தபஞ்சாக்ஷர மூர்த்தியாய் விளங்குவதைப் பகிர்முகத்திற்பார்க்கும் பேறுவுடையேன். தெரிசனைகொடுத்தருளவேண்டும் - என்று தாழ்ந்தனர். நீ கோயிலுட்புகுந்து அமலேசனுக்கு விதிப்படி பூஜை செய்தால் இந்த ரகசியம் வெளியாகும் - என்று தியாகப்பெருமான் திருவாய்மலர்ந்தருளினர். உடனே முனிவன் வணங்கிச்சென்று கோயிலுட்புகுந்து, தனது மனவர் வேண்டிய பூஜாதிரவியங்களை யாவுமட்டிக்கொடுக்கப் பூசிப்பாராயினன். புண்ணியாகவாசனம் செய்து, சிவாகமவிதிப்படி அஷ்ட புஷ்பதீபதூபங்களோதகற்பூர தீபாதி நிர்மாலியங்கழித்து, கந்த தைலாதி சந்தனாதி மான அபிஷேகம் செய்து திருவொற்றாடை சாத்தி விபூதி ச

தனம் அறுகு அக்ஷதை வில்வம் திவ்யவஸ்திராபரணாதியணிந்து பாத்தியாசமனார்க்கிய தூபதீபவர்க்கான்ன நிவேதனாதிசெய்து சுத்த வில்வசகஸ்திரநாமார்ச்சனைபுரிந்து பஞ்சமக்கற்பூர தீபங் காட்டும்போது ஜோதிமயமாய் இருபத்தைந்து கோணயந்திரத்துக்கிடையே ஆனந்த பஞ்சாக்ஷரமயமாய் லெல்லிட்டின ஏதர் விளங்குவதைக்கண்டான். இந்த ஆச்சரியமான காட்சியைத் திருமால் முதலிய தேவரும் முனிவரும் மனிதரும் தெரிசித்துப் பேரானந்த பரவசராய் அரகர சிவசிவ என்றுச்சரித்துச் சந்நிதியில் ஆனந்தக்கூத்தாடினார்கள். அச்சோதிமயமாய் விளங்கிய பேரொளியே ஆகாயத்தில் இடபவாகனத்தில் அம்மையுடன் விளங்கி முனிவரைப்பார்த்து தவசிரோன்மணியே, உனது பேரன்பினால் யாரும் காணா ஆனந்த பஞ்சாக்ஷரமே யிவ்விலிங்கமென்பதைக் காட்டினோம். நீ வேண்டியவரம்கேள் தருவோம் என்று திருவாய் மலர்ந்தருளினார். துருவாசமாமுனி வணங்கி உச்சியிற் கரங்குவித்துநின்று கண்ணீர்பெருக நாத்தழுதழுப்ப கிருபாசமுத்திரமே. இச்சிவலிங்கத்தின் உண்மை யுருவத்தை இவ்வாறென்று காட்டக் கண்குளிரக்கண்டு மகிழ்ந்தனன். திருவருளுக்குச்சிறியேன் இவ்வளவு பாத்திரனாயினேன். இனி வேண்டற்பாலதொன்று, ஆயினும் அருண்மறுத்தற் கஞ்சி வேண்டுகின்றேன். நான் செய்யும் தவம் எவ்வளவாயினும் ஏதாவது தவறு பிறரிடங்காணிற் கடுங்கோபம் வந்து மனதைச்சலிக்கச்செய்கின்றது. ஆனால் '[illegible] பொறுமைத்தை' வேண்டிப் பெற்ற சுந்திரமுதலிய பெரியோர் கொள்கைப்படிச் சிவாபசாரம் கண்டபோது வருதலால் அது நற்கோபமாயினும் அப்பெரியோர்க்கதுசரி. என்போன்ற சிறியவர்களுக்கு இக்கோபம் நாளடைவில் தீமைக்கும் இடமாகுமோவென்றஞ்சுகின்றேன். ஆதலால் எம்பெருமானே, எளியேற்கு இனி இக்கோபம் இன்றிச் சாந்தமெய்தும்படி திருவருள் செய்க என்று வணங்கினர். நீ இப்பொழுது பஞ்சமுகத்திற் றரிசித்தவாறே அந்தர்முகத்திலும் ஆனந்த பஞ்சாக்ஷர மூர்த்தியைத் தியானித்துத் தவம்புரிவாயாகில் உன் எண்ணம் கைகூடும் என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தனர். அம்முனிவர் பெருமையையும், அவ



ர்க்கு ஆனந்த பஞ்சாக்ஷர தெரிசனமும் வரமும் கொடுத்தருளிய சிவபெருமானது பெருமையையும் நினைந்து தேவரும் மனிதரும் வியந்து குதூகலித்தார்கள்.

அமிர்தானந்த பஞ்சாக்ஷர சிவலிங்க தரிசனப்படலம் முற்றிற்று.

---

## பதினைந்தாவது பரசண்டோபாக்கியானப்படலம்.

முன்னொருகாலத்தில் ஹர்ஷாநந்தர் என்றோர் முனிவர் மேருமலையை யடைந்து அநேகவருடம் தவஞ்செய்யச் சிவபெருமான் அவர் முன்றோன்றி நீ பெறவேண்டித் தவஞ்செய்கின்றதென்ன என்று வினவ, முனிவர் எத்தலம் உலகிலுள்ள தலங்களுட் சிறந்தது? எத்தலத்தில் வசித்தாற் சீவன் முத்திபெறுதற் கைகூடும்? என்று வணங்கினர். பரமசிவன் இம்மலையின் நடுச்சிகரத்தில் ஓர்கற்பக தருவிருக்கிறது. அதன் வலக்கிளையிற் பிரசண்டமென்றோர்காக மிருக்கிறது. அதனிடத்தில் உன்சந்தேகம் நீக்கிக் கொள்வாய் என்று திருவாய் மலர்ந்தருளினர். ஹர்ஷானந்தர் வணங்கி விடைபெற்று மேருமலைக்குச்சென்றனர். அங்குத்தவம்புரியும் முனிவரிடத்துச் சென்று அவர்கள் எதிர்கொள்ளப் புகுந்து தாம்வந்த காரியம் கூறினர். அம்முனிவர் ஹர்ஷாநந்தரை நோக்கி இதனைச்சாதாரணகாகமென்று நினையாதீர். இது பிரசண்டவாயசம் என்னும் மகாரிஷி. இவர் ஆதி சிருட்டிகாலத்திலேயே உண்டானவரோ அறிகிலம். அநேகபிரமகற்பங்களைக் கண்டிருப்பதாகத்தெரியவருகிறது. சிறுதவத்தினராகிய நாங்களே அநேகஞ் சதுர்யுகம் கண்டிருக்கிறோம். பெருந்தவத்தினராகிய அவரது ஆற்றலை உள்ளவாறுரைக்க வல்லார் யாவர் என்று பேசிக்கொண்டிருக்கையிற் பிரசண்டவாயசம் அத்தருவின் இலை நடுவிருந்து பொன்மயமாகிய மேனியில் விபூதி ருத்திராக்ஷம் ஜொலிக்கக் கீழே வந்து ஹர்ஷாநந்தரை உபசரித்துக் கற்பதருவிலையாகிய ஆசனமீந்து இருக்கச்செய்து தானுமிருந்து முனிவரே

இங்கு வந்தகாரியம் யாது என்று வினவ, ஹர்ஷாகந்தர் முனிசி
ஷ்ரேஷ்டமே, அடியேன் நெடுங்காலஞ் சிவபெருமானை நோக்கித்த
வம்புரிந்தேன். எம்பெருமான் எழுந்தருளியந்து என் சந்தேகத
தைத் தேவரீடம் வந்து நீக்கிக்கொள்ளும்படி ஆஞ்ஞாபித்தனா.
உலகிலுள்ள தலங்களைவற்றிலும் சிறந்த புண்ணியக்ஷேத்திரம்
யாது? எத்தலத்தில் ஜீவன் முத்தி எளிதிற்கைகூடுமே? என்பது
நான் என் சந்தேகம் என்றனர். பிரசண்டவாயச முனிவர் அதி
கேட்டுச் சிவபெருமான் திருவருளை வியந்தருளி எம்பெருமான்
திருவிளையாடலை என்சொல்வேன். எத்தனையோ தேவர் முனிவரி
ருக்க வென்னையுமோர்பொருளாகத் திருவுளங்கொண்டருளப்
பெற்றேன். இதனினும்யான் பெறும் பேறுளதோ? என்று ஆநந்
தபாஷ்பம் பெருகச் சொல்வாராயினர்.

தக்ஷணதேசத்தில் சோழநாட்டில் திருநெல்லிக்கா வென்
னொரு புண்ணியக்ஷேத்திரமிருக்கின்றது. அத்தலத்தின் பெரு
மை என்னசொல்வேன்! அதைப்போன்ற புண்ணிய க்ஷேத்
திரம் மூவுலகிலுமில்லை. அதிலவிக்கிற ஜீவன் அண்டசம் சுவேத
சம் உத்பிசம் சராயுசம் ஆகிய யோனிபேதங்களில எதிற்பிறந்
தாலும் ஆமலகேசர் திருவருளால் ஜீவன் முத்தியடைகின்றது.
முப்பத்துமுக்கோடி தேவர்களும் அத்தலத்தில் எப்போதும்
சேவித்துக்கொண்டேயிருக்கிறார்கள். மழையில்லாமல் வெகு
காலம் எவ்விடத்திலும் நீர் வறண்டபொழுதும் இத்தலத்திலுள்ள
ஐந்து தீர்த்தங்களும் வற்றுவதேயில்லை. அமரர் முனிவரால்
துன்பமுறும்பொழுது தேவர்கள் பிருகஸ்பதி ரூபமாக இத்
தலத்தில் தவம்செய்துகொண்டிருக்கிறார்கள். இவ்வாறு இங்கு
த்தவம்புரிந்த வோர் அன்னப்புள்ளின் வயிற்றிற்பிறந்த இருபத்
தோர் பறவைகளில் நான் ஒருவன். எங்களைக்காப்பாற்ற எங்கள்
அன்னைக்கு முடியாமையால் எங்கள் மனப்படி செல்ல உத்தர
விடுத்தது. அச்சமயம் பிரமலோகத்திருந்து எங்கள் தந்தை
அன்னம் வந்து இந்த நெல்லிவனத்தினும் சிறந்த ஸ்தலம்
வேறொன்றில்லை. இத்தலத்திற்றவமாற்றில் நீங்கள் நல்லநிலைமை
யையடைவீர்கள் என்று சொல்ல நாங்களும் அநேககற்பம் தவ



ம்புரிந்தோம். என்னுடன் பிறந்த இருபது பறவைகளும் முத்தி
யடைந்தன என்றுரைத்தனர். அதுகேட்ட ஹர்ஷாகந்தர் சர்வ
சங்கார காலத்தில் தேவரீர் எவ்வாறு ஜீவித்திருந்தீர்? என்று
கேட்க வாயசமுனிவர் எல்லாம் ஒடுங்கினகாலத்தில் நான் ஆகாய
த்திலொடுங்கிப்பின் வாயுதேயுமுதலிய பூதங்களையடைந்து மகாப்
ரளயகாலத்தில் அப்பூப்பதியிலிருந்து பின்சிருட்டியில் இப்பறவை
உருவத்தை அடைந்தேன் என்றனர் - எல்லாமும் நாசமடைகி
ற ப்ரளய காலத்தில் நீர் இவ்வாறிருந்த வன்மைக்குக் காரணம்
யாது? என்று கேட்க வாயசமுனிவர் - நெல்லிவனம் கோயில்
கொண்டு வீற்றிருக்கின்ற அம்மை அப்பர் அருள்வலியே யன்றி
வேறில்லை. அத்திருவருளிருந்தால் ஆகாத காரியமும் உள
தோ? பிரளய காலத்திலும் இத்தலத்திலுள்ள ஐந்து நெல்லிமர
மும் அழியாதிருக்கும். சிவகிருபையால் இதனடியிலிருந்து
பிரமன் உலகங்களைச்சிருட்டித்தான். இரணியாக்ஷன் பூமி
யைச்சுருட்டிச் சென்றகாலையில், ஆதிவராகன் இந்த நெல்லி
மரத்தினடியிலிருந்து அவனைக்கொன்று உலகத்தை மீட்டுவந்
தான். இவ்வாமலகவனத்தில் அநேக மாண்டுதவமிழைத்து நெல்
லிவனநாதரையும் மங்களாம்பிகையையும் பூசித்துத் திருமால்
முதலிய தேவர்கள் பாற்கடல்கடைந்து அமுதமெடுக்கும் வலி
பெற்றார்கள். அக்காரணத்தால் ஆமலகேசரும் மங்களநாயகி
யும் அமிர்தேச்வரன் அமிர்தேச்வரி எனப்பேர்பெற்றனர். அவர்
கள் அருளால் நான் பற்பல பிரமகற்பம்பார்த்தேன். பலமுறை
பாற் கடல்கடைந்ததுணர்வேன் பலமுறை நடந்த திரிபுரசங்
காரப் தெரிவேன. இம்மேருவிலிருக்கிற நெல்லிவனத்திற்கும்
அந்நெல்லிவனத்திற்கும் வித்தியாசமேயில்லை. இதற்குச்சிவசக்
யாமலகமெனப்பெயர். அதற்குச் சக்தி சக்யாமலகமெனப்பெயர்
என்று கூறினர்.

இவ்வுண்மையைக் கேட்ட ஹர்ஷாகந்தரும் மற்ற முனிவர்
களும் நெல்லிவனத்தையடைந்து சூரிய தீர்த்தம் முதலிய பஞ்ச
தீர்த்த ஸ்நானம் செய்து பக்தி முதிர்ந்தவர்களாய் ஆமலகேச

ரையும் மங்களநாயகியையும் தினந்தோறும் பூசித்துக்கொண்டு அத்தலத்தில் நீங்காது வசிப்பாராயினர்.

பிரசண்டோபாக்கியானப் படலம் முற்றிற்று.

# பதினாறாவது சுசன்மாப்படலம்.

கலிங்கதேசத்தில் சிரவந்தி என்னும் நகரத்தில் பிராமண குலத்திலே வேதசன்மாவென்றொரு பிரமசாரி நல்லாசாரியனை யடுத்து நான்கு வேதம் ஆறு சாஸ்திரம் முதலிய நூலெல்லாம் கசடறக் கற்றுணர்ந்து தீபாம்பிகை யென்னும் கன்னிகையை மணந்து இல்லறம் நடாத்துவானாயினன். இவர்க்கு இளம்பருவத்திலேயே ஆண் மகவு பிறந்தது. அதற்கு சுசன்மாவென்று நாமகரணம் சௌளம் உபநயனமிவையெல்லாம் செய்தனர். சுசன்மாவுக்கு பாலியம் நீங்கி யௌவனம் வந்தது.

யௌவனத்தை யடைந்த சுசன்மாத்தனது மறையவர் குலாசாரங்களை யொவ்வொன்றாய்க் கைவிட்டு தனது பிதா முறையிடவுங் கேளானாய்க் கீழ்மக்கள் கூட்டத்திற் சேர்ந்து புலாலூண் கள்ளுண் முதலியவற்றைக் கைக்கொண்டான்.

நாளாகவாகத் தீக்குணம் மிக, வேசையர் வழிச் சென்று நின்ற சுசன்மா ஈன்றாளாகிய தீபாம்பிகை மீதும் காதல் கொண்டனன். அவளும் இணங்கினள். கேடுகாலம் வருவாயின் யாவர் தடுக்க வல்லவர்? நற்றாயெனினும் சகோதரியெனினும் அவர்களுடன் பேரறிவுடையாராயினும் ஆடவர்கள் தனித்து ஒரேயிடத்தில் வசித்தலொழிக, என்றறிஞர் கூறும் ஆப்த வாக்கியம் இவனிடத்தினிது விளங்கியது. இவ்விருவரும், விதியும் காலமும் ஒத்தலால் விரும்பியபடியே புணர்ந்து வந்தனர் ஐயோ பாவம்! பாவம்!



இத்தீச்செயல் பிதாவுக்கு தெரியவந்தது. அந்நற்குண மறையவர் என் செய்வார்! தம்மாலியன்றயளவு தடுத்தும் இவர் தீச்செயல் குறைந்திலது. இதைப் பிறருக்குச் சொல்லவும் வெட்குற்று மனமிக நொந்து வேறு செயலற்றிருந்தனர்.

சிலநாட் ...றிய சுசன்மாவு மவன்றாயு மிக்கொடுஞ் செயலிற் றறையாது மேலு மேலு மதி கரித்துவர, ஒரு நாட் காலையிற் சுசன்மாவெழுந்து தனது தீய நண்பினரோடு வெளியேறிக் கள் ...ண்டு மதிமயங்கி, நண்பகல் வரை வீட்டிற்கு வந்தனன். அவ... ம்முன்றான் தடாகத்திற்குச் சென்ற வேதசன்மா வருவ...கு முன் அவரது பூசைக்கு இடமமைத்து மெழுக்கிட்டுக் ...லமிட்டு இன்னும் வேண்டுவ செய்துகொண்டிருந்தனள். ...ட்டினுள் நுழைந்த சுசன்மா இவளைக்கண்டு கள் வெறியோடு காமவெறியும் மிக, அவள் கணவன் வந்து விடுவானென்று ...ன்முறை தடுக்கவும், கேளாது வலிந்து புணர்ந்தனன். அப்போது வேதசன்மா ஸ்நானம் சந்தியாவந்தனாதி முடித்து திருமஞ்சன பாத்திரமேந்தி, ஸ்ரீருத்திரபாராயணம் செய்துகொண்டு வீட்டிக்குள் வந்து, நடந்த ஆபாசத்தை நோக்கி ...னம் நடுங்கி நின்றனன். உடனே அவன் மனைவி பதைத்தெ...ழுந்து புறம் சென்றனள்.

...னது தீச்செயல் முடிவுபெறாமையாற் சுசன்மா மிக கோப...ண்டு இனியிருப்பதனாலென்றோ நான் நினைத்தபொழுதே ...பயனில்லையென்று நினைத்து கையிலகப்பட்டதோர் மண்வெ...ட்டியாற் சிரந்துணித்தனன். கள்ளுண்டல் காமம் இவற்றுள் ...ன்றே யொருவனை அநேகம் பாவச் செயல்கள் செய்வித்து ரௌரவம் முதலிய நரகங்கட்குட்படுத்தும். இவை இரண்...டு ஒருவனிடத்திற் கூடின் அவனுக்கீடேற்றமுண்டோ?

இரவு வந்ததும் பிறரறியாமற் பிரேதத்தை தகனஞ்...செய்து விட்டுக் கைக்கொண்டுபோகக்கூடிய திரவியாபரணாதி...களை யெடுத்துக்கொண்டு, தாயுடன் சுசன்மா, தமது முறை

தெரியாததோரிடத்துச் சென்று ஸ்திரீ புருஷர்களைப்போல வாழலாமென்று, சிரவந்தியைத் துறந்து ஊர்க்கு வெளியே காட்டுவழியாகச் செல்லுகையிற் கள்வர் சூழ்ந்து உரப்பியடித்துத் தாயையும் பொருளையும் கவர்ந்தேகினர்.

பெண்டாண்ட தாயையும் பொருளையும் இழந்த சுசன்மாவைப் பிரமகத்தி பற்றியது. அது அவனை அதட்டும், உரப்பும், குத்தும், அடிக்கும், வெருட்டும், மாபாவி என்னும், இழுக்கும் தள்ளும், உறங்கவொட்டாது, உண்ணவொட்டாது, இருக்கவொட்டாது, நிற்கவொட்டாது, இவ்வாறு பல துன்பு செய்ய சுசன்மா உருக்குலைந்து, அழுக்குக் கந்தை சுற்றி, திரிமாறி, ஊணுறக்கமின்றி, பார்ப்பவர் நகைக்குமாறூரூரா யலைந்துபுலன்றனன்.

இவ்வாறலைந்து பல்லாண்டு கழியச் சுசன்மா உலகுமுழுதுமுழலைந்த பின், பூர்வஜன்மத்து நல்வினை சிறிது கைகூடத் திருவாரூரை யடைந்து, கலாதீர்த்தக் கரையிற் சென்று நீர் வேட்கையால் அதனுள்ளிறங்க அப்புண்ணிய தீர்த்த மகிமையால் இவனைத்தொடர்ந்த பிரமஹத்தி விலகி நின்றது. இவனுடைய அன்னையும் கொடுநோய்களாலுழன்று, கள்வர்களாற் றுரத்தப்பட்டு அவ்விடம் வந்து சேர்ந்தனள். அத்தீர்த்தக்கரையில் மகான்கள் சொற்படி சர்வதோஷ நிவாரண கட்டத்தில் மூழ்கினார்கள். கரை யேறினதும் பிரமஹத்தியும் நோயும் முன்னினும் அதிகக் கடுமையாய் வந்து பற்ற, அவர்கள் அப்பெரியோர்முன் முறையிட்டு வணங்கினார்கள். அப்புண்ணியர்கள் அவர்களை நோக்கி தெற்கே திருநெல்லிக்காவென ஓர் புண்ணிய க்ஷேத்திரமிருக்கிறது. இந்திரன் மகனாகிய ஜயந்தன், ஒருகாலத்தில் இராமபிரானுடன் வனஞ்சென்ற சீதையைக் காமுற்று ஓர் காகவுருவாய்த் தனத்தைக் கொத்த, இராமபிரான் கோபித்துச் சரமேவ, அதற்காற்றாது திருநெல்லிக்காவடைந்து பாணத்தின் உபாதியையும் தோஷத்தையும் நீக்கிக்கொண்டான். நீங்களும் அங்குச்சென்றாற் பிரமஹத்தியும நோயும் நீங்கும் எனச்சொன்னார்கள்.



உடனே அவ்விருவரும் திருநெல்லிக்காவையடைந்து அன்று தீர்த்தோற்சவமாதலால் மூழ்கச்செல்வாருடன் சென்று சூர்யதீர்த்தத்தில் இறங்கும்போதே பிரமகத்தி விலகி நின்றது. மிகுந்த சந்தோஷத்துடன் மூழ்கிக் கரையேறினார்கள். ஏறின அளவில் மீண்டும் தொடர்ந்தது. அதுகண்டு மிக வருந்தி அங்கிருந்த சிவநியமானுஷ்டான சீலராகிய ஒரு வயோதிகப் பிராமணரை வணங்கித் துயரமுழுதும் கூறி வணங்கினார்கள். அப்பெரியவர் அவர்படுந்துன்பம் நோக்கி மனமிக விரங்கி - நீங்களிருவரும் ஒருவருஷம் இத்தலத்திலிருந்து தினந்தினம் இதிலுள்ள ஐந்து தீர்த்தத்திலும்பிராதஸ்நானம்செய்து விபூதிருத்திராக்ஷம் பூண்டு பஞ்சாக்ஷரம் ஜெபித்து, திருக்கோயிலிலே யங்கப்பிரதக்ஷணஞ்செய்து, கோயிற்பசுக்களுக்கு அறுகம்புல்லருத்தி, ஒருபொழுது பிச்சையேற்றுண்டு, இந்நியமம் தவறாது நடத்தி வருவீர்களாயின் நீங்கள் படுந்துன்பம் முற்றும் நீங்கும் என்றுரைத்தனர்.

அதுகேட்ட சுசன்மாவும் தாயும், அப்பெரியவர் சொல்லியவாறே விடிய ஐந்து நாழிகையளவிலெழுந்து, தீர்த்தங்களில் மூழ்கி அங்கப்பிரதக்ஷணம் செய்து அறுகம்புல்லருத்திப் பிச்சைகொண்டுண்டு நியமந்தவறாது நடத்தி, பெரியோர் வாக்கின்படி, பாதகமுழுதும் நீங்கப்பெற்று, முடிவிற் சிவகதியும் அடைந்தனர்.

ஆமலகவனம் கோயில் கொண்டருளும் அம்மை அப்பர்கள் கிருபையைப்புகழ்ந்து தேவரும் மனிதரும் கொண்டாடினர்

சுசன்மாப்படலம் முற்றிற்று.

---

## பதினேழாவது திருவிழாப்படலம்.

இந்திரன் பிரமன் திருமால் முதலிய தேவர்களெல்லாரும் தங்களுக்கு அமுதம் கிடைக்கும்படி திருவருள் செய்த, ஆமலகவனத்தில் அநவரத சாந்நித்தியராய் வீற்றிருந்தருளுகின்ற

அமுதேச்சுவரன் அமுதேச்வரி திருவடிகளிற் கொண்ட அன்பு மீறூர அவ்விருவருக்குந் திருவிழாச் செய்ய வேண்டுமென்று நினைத்துத் தேவர் குருவாகிய பிரமுபகவானை உசாவினார்கள். அவரும், காமிகாகம விதிப்படி, சித்திரைமாதம் மிருகசீருஷ நக்ஷத்திரமும் பூரணையும் கூடிய சுபதினத்தில் தீர்த்தோற்சவம் நடத்தவேண்டுமென்றுரைத்தனர். அதுகேட்ட தேவர்கள் அவ்வாறே அனுஞ்ஞை விக்கினேச்வர பூஜை புண்ணியாகவாசினம் மிருத சங்கிரகணம் வாஸ்துசாந்தி யாதி பூர்வாங்கங்கள் செய்வித்துப் பின் உரியதினத்திலே வாஸ்து சாந்தி செய்து நவகுண்டங்களிலும் சிவாக்கினிகள் ஜொலிக்க ஆகுதியாதிகள் சவிஸ்தாரமாகச் செய்து, துவஜாரோகணம் புரிந்து, பஞ்சமூர்த்திகளும் உரிய வாகனங்களிலே சர்வாலங்கார பூஷிதர்களாயெழுந்தருளிச் சோடசோபசார விசேஷபூஜை கொண்டருள, ஆரியமும் செந்தமிழுமாகிய இருவகை வேதங்களும் கோஷிப்ப, சகல வாத்தியங்களுமுழங்க, குடைக நட்டி ஆலவட்டம் முதலிய சகல மெய்வரிசைகளும் சூழ வீதியிலே திருக்கோலக்காட்சி தந்து பவனி வந்தருளச்செய்து, இப்படியே எட்டுநாளும் வாகனாதிகள் வெவ்வேறாக நடத்தி, ஒன்பதாநாள் மிக விசேஷமாக ரதோற்சவமும், பத்தாள் தீர்த்தோற்சவமும், பின்பு திருக்கல்யாணோற்சவாதிகளும் சிறப்பாக நடத்தினார்கள். இந்தச்சைத்ரோற்சவமே பின்பு சோழமகாராஜாக்களாலும் பின்னையோராலும் நடைபெற்று வருகின்றது.

இந்த நெல்லிவனமான்மியத்தைப் பத்தியுடன் படித்தோரும் கேட்டோரும் படிப்பித்தோரும் இம்மையில் அட்டபோகங்களையும் அனுபவித்து சன்மக வின்று குபேரச் செல்வம் பெற்று நோயின்றி வாழ்ந்து, பின் வானுலகாண்டு, முடிவிற் சிவபெருமான் திருவடித்தாமரையையடைவார்கள்.

திருவிழாப்படலம் முற்றிற்று.

திருநெல்லிக்காத்தலபுராணம் முற்றிற்று.

O2 3 38 2119